விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 048 வள்ளுவர் ஆண்டு 2055 தை 22 திங்கட்கிழமை (05.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



### சுதந்திர தினம் கரிநாளாக பிரகடனம்

# பொலிஸாரின் அடாவடித்தனத்தால் போர்க்களமானது கிளிநொச்சி





- பேரணியைக் கலைக்க பொலிஸார் தடியடி, கண்ணீர்ப் புகை, நீர்த்தாரைப் பிரயோகம்.
- மாணவர்கள், பெண்களிடம் அத்துமீறிய பொலிஸார்.
- சிறீதரன் எம்.பி மீதும் தாக்குதல்.
- 5 மாணவர்கள் கைதாகி பிணையில் விடுவிப்பு.

(15ஆம் பக்கம் பார்க்க)



சிறீதரன் எம்.பி தாக்கப்பட்டவேளை.



## ஒற்றையாட்சிக்கு ஆபத்து; பதறுகிறார் சன்ன ஜயசுமன

(கொழும்பு)

"அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் அமுலில் இருக்கும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க 15

## சுதந்திர தின நிகழ்வை புறக்கணித்த தூதுவர்கள்

(கொழும்பு)

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கொழும்பிலுள்ள அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களும் 16

## பொலிஸாரின் அராஜகம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது

### சிறீதரன் எம்.பி காட்டம்



(கிளிநொச்சி)

பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் தாக்கிய வேளை நான் அவர்களை மீட்கச்சென்றபோது பொலிஸார் ஒருவர் என் மீது தாக்குதல் நடத்தினார் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பொலிஸார் நடந்துகொண்ட விதத்தின் மூலம் இலங்கை அரசாங்கத்தின் அராஜகத்தை - 15

## ஜனாதிபதி ரணில் தலைமையில் நாட்டின் 76ஆவது சுதந்திர தினம்




(கொழும்பு)

76 ஆவது தேசிய சுதந்திர தின விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் "புதிய தேசம் அமைப்போம்" எனும் தொனிப்பொருளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு காலி முகத்திடலில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். 16

## கரிநாள் போராட்டம் மட்டக்களப்பிலும் முன்னெடுப்பு



16

## வாகன விபத்து; நால்வர் படுகாயம்



(கிளிநொச்சி)

சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏ9 வீதியில் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் போக்குவரத்து நெரிசல் 15

### 76ஆவது சுதந்திர தினத்தில்

## தமிழில் ஒலித்த தேசிய கீதம்

(கொழும்பு)

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் நேற்று காலிமுகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது. 15

## மூன்றாம் தவணை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மூன்றாம் தவணை இம்மாதம் 16ஆம் திகதி நிறைவுற்று எதிர்வரும் 19ஆம் திகதி 2024 கல்வியாண்டு ஆரம்பமாகிறது. (ந-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிராக லண்டனில் ஈழத்தமிழர்கள் எதிர்ப்புப் பேரணி






இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் ஒடுக்கு முறைக்கு எதிராகவும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வலியுறுத்தியும் **“தன் ஆட்சிக்கான உரிமைக்குரல்”** எனும் தொனிப் பொருளில் கரிநாள் போராட்டம் பிரித்தானியத் தமிழர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

உரிமைக்குரல் எழுப்பிய இப் பேரணியானது ஸ்ரீலங்கா உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு, பேரணியாக பங்கிங்ஹம் அரண்மனைக்குச் சென்று பின்னர் பிரித்தானிய பாராளுமன்ற சதுக்கத்தை பேரணி சென்றடைந்தது.

இவ் எதிர்ப்பு பேரணியை ஈழத்தமிழர் பேரவை, தமிழர் ஒருங்கிணைப்பு குழு, சர்வதேச தமிழ் ஈழ இராஜதந்திர கட்டமைப்பு மற்றும் தமிழர் இளையோர் அமைப்பு ஆகிய அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


## மரண அறிவித்தல்



### திருமதி நாகேஸ்வரி விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம் சிறாம்பியடி ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ்சை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி விக்னேஸ்வரன் அவர்கள் கடந்த 29.01.2024 (திங்கட்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசேகரம் - மங்கையக்கரசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவராசா - நாகரத்தினம் தம்பதியரின் மருமகளும் விக்னேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும் பாலேந்திரனின் பாசமிகு சகோதரியும் சிவரூபன், கரிஹரரூபன், கஜரூபன், சோபனா ஆகியோரின் அன்புத் தாயாரும் சலஜா, சுதர்ணமேனி, அபிராமி, சிவரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இராஜேஸ்வரி, பிரணவஈஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் அபிசேக், அஜய்சேக், விதுசன், விதுசாயினி, விதுசிகன், அக்சயன், அக்சாயினி, அக்சிதன், அபிலாஷ், அக்சயா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.02.2024 இன்று திங்கட்கிழமை மதியம் 1.00 மணியளவில் (பிரான்ஸ் நேரம்), 5.30 மணியளவில்(இலங்கை நேரம்) Epinay's Funeral house, 95 rue Marcel sambat 83340 Epinay villetaneuse france இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு :
விக்னேஸ்வரன் - 0094773151245
சிவரூபன் - 0014167263826
கரிஹரரூபன் - 004917680257644
கஜரூபன் - 0033695203661
சோபனா - 0014388780541

தகவல் :
சி.விக்னேஸ்வரன்
நந்தாவில் அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(18888)


உதயமாகிறது புதிய கூட்டணி

## சந்திரிகா பிரதமர்; ரணில் ஜனாதிபதி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் புதிய கூட்டணி ஒன்று தற்போது உருவாகியுள்ளது.

இந்த புதிய கூட்டணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் நியமிப்பதற்கு ஆதரவளிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக நியமித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை பிரதமராக நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

எனினும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரையும் ஆதரிப்பது தொடர்பில் தாம் இதுவரையில் உறுதியான தீர்மானத்தை எடுக்கவில்லை என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## 23 இந்திய மீனவர்கள் கைது டாக்டர் ராமதாஸ் கண்டனம்

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் நேற்றையதினம் 23 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தமிழக மீனவர்களிடையே பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இலங்கை கடற்படையின் இச் செயற்பாடுகளுக்கு பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் கடும் கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 23 பேரை கச்சதீவு அருகே சிங்களக் கடற்படையினர் கைது செய்திருக்கின்றனர்.

அவர்களின் இரு மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கச்சதீவை அண்மித்த இந்திய கடல் எல்லையில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது சிங்களக் கடற்படையினர் அத்துமீறி நுழைந்து கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

கடந்த மாதத்தில் மட்டும் 40 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படை கைது செய்திருக்கிறது.

அதற்குள்ளாகவே மேலும் 23 மீனவர்களை சிங்களக் கடற்படையினர் கைது செய்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பறிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்களைச் சிங்களப்படை தொடர்ந்து கைது செய்து வருகிறது. இதற்கு மத்திய அரசு முடிவு கட்ட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ந-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கரிநாள்’ பேரணியில் பொலிஸாரின் அடாவடி






















(படங்கள்:- சப்தசங்கரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடர்
# யங்கம்பன்ஸ், நவஜீவன்ஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி


யங்கம்பன்ஸ்


நவஜீவன்ஸ்

யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடரில் யங்கம்பன்ஸ் மற்றும் நவஜீவன்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதியது.


ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய யங்கம்பன்ஸ் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென்ஜேம்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தில் ஏக ஆதிக்கம் செலுத்திய உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (நி-90)

## பந்து தாக்கியதில் இலங்கை வீரர் வைத்தியசாலையில்

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்றுவரும் ஒற்றை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை இலங்கையின் அறிமுக ஆட்டக்காரர் சாமிக்க குணசேகரவின் தலைக் கவசத்தை நவீத் சத்ரான் வீசிய பந்து தாக்கியதால் அவர் உபாதைக்குள்ளாகி பின்னர் கட்டாய ஓய்வு பெற நேரிட்டது.



அவருக்குப் பதிலாக மூளை அதிர்ச்சி மாற்று வீரராக கசுன் ராஜித்த உடனடியாக அணியில் இணைக்கப்பட்டார். ஆனால் அவர் துடுப்பெடுத்தாடாத போதிலும் ஆப்கானிஸ்தானின் 2 ஆவது இன்னிங்ஸில் பந்து வீசினார்.

24 வயதான இளம் வீரர் சாமிக்க குணசேகரவுக்கு உடனடியாக முதலுதவி அளிக்கப்பட்டதாகவும் பின்னர் மேலதிக வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அணியின் முகாமையாளர் தெரிவித்தார்.

இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியபோது 107ஆவது ஓவரில் நவீத் ஸத்ரான் வீசிய பவுன்சர் பந்து குணசேகரவின் தலைக்கவசத்தைத் தாக்கியது.

அவரது தலைக்கவசத்தைத் தாக்கிய பந்து விக்கெட் காப்பாளருக்கு மேலாக சென்று பவுண்டறியைக் கடந்தது.

இதனிடையே குணசேகரவுக்கு மூளை அதிர்ச்சி ஏற்பட்டதா என பரிசோதிக்கப்பட்டது. ஆனால் அவ்வேளையில் அவர் அவ்வளவாக அதிர்ச்சிக்குள்ளாகவில்லை என்பது கண்டறியப்பட்டது.


இதனை அடுத்து குணசேகர தொடர்ந்து துடுப்பெடுத்தாடினார். ஆனால், 3 ஓவர்கள் கழித்து குணசேகர திணறலுக்கு உள்ளானார். அப்போது மருத்துவக் குழுவினர் அவரை பரிசோதிக்க மைதானத்திற்குள் சென்றபோது குணசேகர கடும் வலியால் தலையைப் பிடித்துக்கொண்டார்.

இதனை அடுத்து அவர் உடனடியாக மைதானத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (நி)

## போட்டியின் போது மைதானத்திற்குள் நுழைந்த உடும்பு

ஆப்கானிஸ்தான் அணி ஒரு டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் இருபது 20 போட்டிகளில் விளையாடுவதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் முதலில் டெஸ்ட் போட்டியில் இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இந்நிலையில் அன்றைய ஆட்டத்தின் போது உடும்பு ஒன்று கிரிக்கெட் மைதானத்திற்குள் நுழைந்தது. இதனால் மைதானத்தில் பரபரப்பு ஏற்பட்டது. நடுவர் ஒருவரின் பெரும் முயற்சிக்கு பிறகு உடும்பு மைதானத்தை விட்டு வெளியேறி ஓடியது. இதையடுத்து போட்டி மீண்டும் தொடங்கியது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சினையை மாற்றியது கூகுள்




(கொழும்பு)

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்திற்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் கூகுள் தனது இலட்சினையை மாற்றியுள்ளது. கூகுள் இலட்சினைக்கு பதிலாக கூகுள் என்று இலங்கைக் கொடி இடம்பெற்றுள்ளது.

ஒரு வரலாற்று நிகழ்வைக் குறிக்கும் வகையில் கூகுள் தனது இலட்சினையை நேற்று மாற்றியுள்ளது. ( நி)

# ஜெல்லி மீன்களால் மீனவர்கள் பாதிப்பு

(கொழும்பு)

வலைகளில் ஜெல்லி மீன்கள் சிக்குவதால் மீனவர்கள் கடும் நெருக்கடியை எதிர்கொண்டு உள்ளனர்.

நச்சுத்தன்மை வாய்ந்த ஜெல்லி மீனைத் தொட்டால் உடலில் அரிப்பு, வீக்கம் ஏற்படுவதுடன் காயங்களும் ஏற்படுவதாகவும் மிகவும் வேதனையான சூழல் நிலவுவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாரவில வளைகுடாவில் அதிகளவான ஜெல்லிமீன்கள் வலையில் காணப்படுவதால் கடற்கரையில் விளையாடுபவர்களும் அவதானமாக செயற்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (நி)


## 3 ஆம் ஆண்டு நினைவலைகளுடன்



மலர்வு 17 . 05 . 1958

உதிர்வு 07 . 02 . 2021

அமரர்.

## நித்தியானந்தம் லங்கநாதன்

திதி: தசமி 05.02.2024

அன்று அத்தனை வலி தந்து சென்ற
உங்களின் இழப்பிற்கு இன்றோடு மூன்றாண்டு
எங்கு தேடியும் கிடைத்திடாத உங்கள்
அரவணைப்பிற்காக தவித்துக் கிடக்கின்றோம் அப்பா!
யாருடைய ஆறுதலும் உங்கள் நினைவுகளை
மறக்கச் செய்யவில்லை அப்பா-நாம்
இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
நீங்கள் எங்களுக்காக வாழ்ந்த
பசுமையான நாட்களின் நினைவுகளுடன்...

(C-8278)

அம்பன்,
குடத்தனை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



அமரர். ஜெராட் ஜெயந்தி

இல:02, றக்கா லேன், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெராட் ஜெயந்தி அவர்கள் 02.02.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவன் அடி சேர்ந்தார்.

எமது குடும்ப தலைவியின் இறுதி வணக்க நிகழ்வு எமது இல்லத்தில் 05.02.2024 இன்று திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் இடம்பெற்று புனித திரேசாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெற்று பின்னர் கொஞ் செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பி.திகதி 1962.02.26 | இ.திகதி 2024.02.02

தகவல் -குடும்பத்தினர்
T.P- 076 3632 862, 074 0735 015

இல:02,றக்கா லேன்,
யாழ்ப்பாணம்.

(18889)

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில்-27.04.1937 | விண்ணில்-03.02.2024

எமது கல்லூரியில் பணிபுரியும்
திருமதி.கலையரசி சசிதரன் அவர்களின்
பாசமிகு தந்தையார்

அமரர். வேலுப்பிள்ளை கந்தையா

அவர்கள் 03.02.2024 அன்று காலமானதையிட்டு
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



ஆசிரியர் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(சி-8279)


# இராசிபலன்

05.02.2024
தை 22, திங்கட்கிழமை
தசமி பிற்பகல் 1.21 மணிவரை
கேட்டை பின்னிரவு 4.12 மணிவரை

சுபநேரம் -12.35-2.05 மணிவரை
இராகுகாலம்-8.05-9.35 மணிவரை

சந்திராஷ்டமம்-
பரணி

வளவன்

**மேஷம்** — மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்,ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**ரிஷபம்** — சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், காரிய அனுகூல முண்டு.

**மிதுனம்** — பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்,உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** — மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்,நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** — வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**கன்னி** — மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், செல்வ நிலை உயரும் வாய்ப்புண்டு,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்** — புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பு உயரும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்,வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** — குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்கள் நல்லமுடிவுக்கு வரலாம், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்,கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** — கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம்,வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம்.

**மகரம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** — திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், தொலைதூரத்து செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**மீனம்** — தடைகள் அகன்று தனவரவு பெருகும் நாள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும்,பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு அனுப்புவதாக கூறி 55 லட்சம் ரூபாய் பணமோசடி

## இடைத்தரகராக செயற்பட்ட பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபரை வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக கூறி 55 லட்ச ரூபாய் மோசடியில் ஈடுபட்ட கொழும்பை சேர்ந்த நபருக்கு இடைத்தரகராக செயற்பட்ட பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெளிநாடு செல்லும் ஆசையில் குறித்த பெண்ணின் ஊடாகவும் முகவருக்கு நேரடியாகவும் பாதிக்கப்பட்ட நபர் 55 லட்ச ரூபாவை கட்டம் கட்டமாக வழங்கியுள்ளார்.

நீண்ட காலமாகியும் தன்னை வெளிநாடு அனுப்பாததால், கொழும்பு முகவருடன் பாதிக்கப்பட்ட இளைஞன் தொலைபேசி ஊடாக முரண்பட்டதை அடுத்து முகவர் இளைஞனின் தொடர்பை துண்டித்துள்ளார்.

அதனை அடுத்து இளைஞன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, பாதிக்கப்பட்ட இளைஞனுக்கும் கொழும்பு முகவருக்கும் இடைத்தரகராக செயற்பட்ட பெண்ணை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை கொழும்பு முகவரை அடையாளம் கண்டுள்ள பொலிஸார் தலைமறைவாகியுள்ள முகவரை கைது செய்வதற்கான நடவடிக்கை களை முன்னெடுத்துள்ளனர். (நி-33)

# 23 தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 23 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மீன்பிடியில் ஈடுபட்ட போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் 2 படகையும் அதிலிருந்த 23 தொழிலாளர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள், காங்கேசன்துறை கடற்படைமுகாமிற்கு அழைத்து செல்லப்பட்டு, விசாரணைகளுக்கு பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்கள த்தினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-33)

# குரங்குகளை கட்டுப்படுத்த வாயுத்துப்பாக்கிகளை வழங்குங்கள்

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குரங்குகளுடைய அட்டகாசத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய சம்மேளனங்கள் மற்றும் கிராம மட்ட பொது அமைப்புக்கள் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர். இது தொடர்பாக கூட்டத்திற்கு வருகை தந்திருந்த பொது அமைப்புக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

குரங்குப் பிரச்சினையால் தென்மராட்சியில் உள்ள 60கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் பொருளாதார ரீதியாக தாக்கங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவை பயிர்களை அழிப்பதுடன் வீடுகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன.

இதனால் விவசாயம் செய்பவர்கள் கண் விழித்து காவல் இருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. சிறிது நேரம் கண் அசந்தால் பயிர்களை அழித்து விட்டு சென்று விடும்.

எனவே தென்மராட்சி மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு குரங்குகளைக் கட்டுப்படுத்த வாயுத் துப்பாக்கிகள்ளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (நி-30)




# தாலிக்கொடியை இரவல் வாங்கி மோசடி செய்த குற்றச்சாட்டில் யுவதி ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

21 பவுண் தாலிக் கொடியை இரவலாக வாங்கி மோசடி செய்த குற்றச்சாட்டில் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பெண்ணொருவரிடம் , அயலவரான யுவதி ஒருவர் கொண்டாட்டங்களுக்கு செல்லும் போது, தாலிக் கொடியை இரவலாக பெற்று அணிந்து சென்ற பின்னர் அதனை மீள அப் பெண்ணிடம் கையளிப்பதனை வழமையாக கொண்டுள்ளார்.

இந்நிலையில் அண்மையில் வழமை போன்று தாலிக்கொடியை இரவலாக வாங்கி சென்ற யுவதி அதனை திருப்பி கொடுத்த போது, கொடியின் அமைப்பில் வித்தியாசத்தை உணர்ந்த உரிமையாளரான அப்பெண் அதனை நகைக்கடை ஒன்றில் சோதித்த போது, அது போலியானது என தெரியவந்துள்ளது.

அதனை அடுத்து குறித்த பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து அயலவரான யுவதியை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது சுன்னாகம் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் இரவலாக பெற்ற தாலிக்கொடியை விற்று விட்டு அதே போன்று போலி தாலிக் கொடியை செய்து அதனை அப்பெண்ணிடம் கொடுத்தமை தெரிய வந்துள்ளது.

குறித்த யுவதியை தடுப்பு காவலில் வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-33)

# போதனாவினுள் போதையில் நுழைய முற்பட்டவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மது போதையில் அத்துமீறி நுழைய முற்பட்ட இருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது போதையில் போதனா வைத்தியசாலை மதிலினால் ஏறி வைத்தியசாலைக்குள் உட்புகுந்த இருவரை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-33)

# யாழ். பல்கலைக்கழகத்தில் பறக்கவிடப்பட்ட கறுப்புக்கொடி




(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினத்தை கரிநாளாக நினைவு கூரும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை தமிழர் பிரதேசங்களில் கரிநாளாக வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கொடிக்கம்பத்தில் மாணவர்களால் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக சூழலில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன. (நி-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 600 | 400 | 450 | 580 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 | 180 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1000 | 1200 | 860 |
| தக்காளி | 800 | 900 | 700 | 800 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 150 | 120 |
| கோவா | 550 | 500 | 700 | 600 | 500 |
| கரட் | 1500 | 900 | 1400 | 1000 | 1200 |
| பூசணி | 220 | 200 | 180 | 250 | 220 |
| புடோல் | 250 | 250 | 300 | 350 | 220 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 300 | 180 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 350 | 380 | 300 | 400 | 300 |
| பாகற்காய் | 650 | 400 | 600 | 600 | 505 |
| வெண்டக்காய் | 600 | 500 | 200 | 500 | 565 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 500 | 600 | 720 |
| லீக்ஸ் | 400 | 450 | 600 | 600 | 600 |
| பீற்றூட் | 800 | 450 | 600 | 600 | 600 |
| கறிமிளகாய் | 600 | 1000 | 800 | 1000 | 810 |
| முருங்கைக்காய் | 1800 | 3500 | 2000 | 3000 | 2000 |
| போஞ்சி | 300 | 350 | 600 | 800 | 425 |
| கத்தரிதம்புள்ள | 400 | 400 | 500 | 400 | — |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 100 | 100 | 60 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 80-120 | 65-90 |
| இராசவள்ளி | 450 | 450 | 400 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 350 | 250 | 300 | 350 | 320 |
| முள்ளங்கி | 80 | 180 | 250 | 300 | 200 |
| [illegible]ங்காணி | 100 | 100 | 100 | 80 | 130 |
| [illegible]லாரை | 80 | 40 | 50 | 80 | 70 |
| சரப்பலா | 100 | 100 | 100 | 200 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தப் பணிகள் தாமதமானால் அனைத்து பரீட்சைகளும் பிற்போடப்படலாம்

## கல்வி அமைச்சர் சுசில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதமானால் இவ்வருடம் நடைபெறவுள்ள அனைத்துப் பரீட்சைகளும் பிற்போடப்படும் அபாயம் உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போதைய கல்வி அமைப்பை சீர்குலைக்கும் ஒரு சிறிய சம்பவம் கூட பாடசாலை அமைப்பில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளினால் பரீட்சைக்காலம் மாத்திரமன்றி பாடசாலைகளின் முழு செயற்பாடுகளும் தடைப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகளிலிருந்து ஆசிரியர்கள் விலகியமையால் இந்தச் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நாளாந்த கொடுப்பனவு தொடர்பில் நிலவும் பிரச்சினையின் அடிப்படையிலேயே அவர்கள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் கடந்த ஆண்டைப் போலவே ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை எவ்வித பிரச்சினையும் இன்றி வழங்கப்படும் என கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உரிமைகளை நசுக்கவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்

## சட்டத்தரணிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றது. உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணையின்போதே சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

மக்களின் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புகள் உட்பட அரசாங்கத்தின் கொள்கையுடன் உடன்பட மறுக்கும் மக்களின் நடவடிக்கைகளை பயங்கரவாதம் என முத்திரைகுத்தி மக்கள் அடிப்படை உரிமைகளை நசுக்குவதற்கு உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை பயன்படுத்த முடியும் என சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் செயலாளர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி சாலியபீரிஸ் பயங்கரவாதத்திற்கான வரைவிலணக்கம் பரந்துபட்டதாக காணப்படுகின்றது.

இதன் காரணமாக அரசாங்கத்தின் நிலைப்பாடுகள், கொள்கைகளுடன் உடன்பட மறுப்பவர்கள் கைதுசெய்யப்பட்டு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் கீழ் தடுத்து வைக்கப்படும் நிலை ஏற்படலாம் என அவர் தெரிவித்தார். (நி)

# பதவி துறந்தார் சுகீஸ்வர பண்டார

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளர் பதவியில் இருந்து சுகீஸ்வர பண்டார இராஜினாமா செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுகீஸ்வர பண்டார முன்னாள் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளராக பல வருடங்கள் பணியாற்றினார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவதற்கு முன்பே அவரது தனிப்பட்ட செயலாளராக பணியாற்றியவர் சுகீஸ்வர பண்டார.

எனினும், தீவிர அரசியலில் ஈடுபடுவதற்காக அவர் அந்த பதவியை ராஜினாமா செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிமல் லான்சா மற்றும் குழுவினரால் உருவாக்கப்பட்ட புதிய கூட்டணியுடன் அவர் தனது எதிர்கால அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எதிர்காலத்தில் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

எரிபொருள் கூட்டுத்தாபனமும் வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு அறவிடப்படும் 18 வீத வற் வரியை உடனடியாக நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரியை குறைக்க நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூட வேண்டிவரும் எனவும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் அரச அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

எரிபொருள் விற்பனையில் மூன்று சதவீதத்திற்கும் குறைவான கமிஷன் பெறுவதாகவும் அந்த கமிஷனில் 18 சதவீதத்தை வற் ஆக செலுத்த வேண்டும் என்றும் சங்கம் கூறுகின்றது.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் இந்த தொகையில் ஊழியர் சம்பளம், மின் கட்டணம், பராமரிப்புப் பணிகளுக்கான பணம் ஆகியவற்றை ஒதுக்கிய பின்னர், இந்த தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளது. (நி)

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## எதிரணியினர் ஒருங்கிணைந்து முன்வைக்குமென அறிவிப்பு

(கொழும்பு)

உயர்நீதிமன்றம் பரிந்துரைத்த விடயங்களில் ஒன்பது விடயங்கள் உள்ளீர்க்கப்படாது நிகழ்நிலை சட்டத்தினை சான்றுரைப்படுத்திய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கை யில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலைச் சட்டமூலம் மீதான விவாதம் கடந்த மாதம் 23,24ஆம் திகதிகளில் நடைபெற்ற திருத்தங்களுடன் நிறை வேற்றப்பட்டது.

எனினும், குறித்த சட்டமூலத்தில் உயர் நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களில் 13 உள்ளடக்கப்படவில்லை என்பதோடு ஏனையவை பற்றி ஆராய்வதற்கு அரசாங்கம் கால அவகாசத்தினை வழங்காது அவசரஅவசரமாக சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று சுமந் திரன் சபையிலும் சபைக்கு வெளியிலும் குறிப்பிட்டிருந்தார்.

அதனையடுத்து, சபாநாய கர் மஹிந்த யாப்பா அபேவ ர்த்தன, சட்டமா அதிபர் திணை க்களத்தின் அதிகாரிகள் மற்றும் பாராளுமன்றக்குழு ஆகிய தரப்பினர் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டு ள்ளமை தொடர்பில் ஆராய் வார்கள் என்றும் அறிவித்தார்.

எனினும், கடந்த முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் சபாநாயகர் நிகழ்நிலைகாப்புச் சட்டத்திற்கு சான்றுரைப்படுத்தினார். இந் நிலை யில் குறித்த சட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, நிறைவேற்றப் பட்ட நிகழ்நிலைச் சட்டத்தின் உள்ளடக்கத்தினை ஆராய்ந்தே அதனை சான்றுரைப்படுத்து வதாக அறிவித்திருந்தார்.

இந் நிலையில் நாம் சான்றுரைப்படுத்துவதற்கு முன்னதாக எம க்கும் அதன் உள்ளடக்கத்தினை பகிருமாறு கோரியிருந தோம். எனினும் அவர் அதனைப் பகிர்ந்திருக்கவில்லை.

இதேநேரம், சட்டம் சான்றுரைப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் உள்ளடக்கத்தையும் உயர்நீதிமன்றம் பரிந்துரைத்த விடயங்களை மையப்படுத்தி ஒப்பிட்டுப் பார்த்தபோது ஒன்பது விடயங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சபாநாயகர் நிகழ்நிலைச் சட்டத்தினை சான்றுரை வழங் கிய செயற்பாட்டுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒருங் கிணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு உள்ளோம்.

இது தொடர்பிலான பேச்சு க்களை நாம் எதிரணிகளுக்குள் முன்னெடுத்து வருகின்றோம். இந்தப் பிரேரணை ஊடாக சபாநாயகரின் செயற்பாட்டை அம்பலப்படுத்துவோம் என அவர் தெரிவித்தார். (நி)

16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1953 . 06 . 21

மறைவு 2007 . 02 . 12

அமரர்.

செல்லத்துரை குணரத்தினம் (சின்னமனி)

திதி - தசமி

அப்பா நீங்கள் எமை விட்டுப் பிரிந்து சென்று பல ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதோடு...!
வாழ்க்கையின் பல இன்னல்களை கடந்தாலும் வாழ்க்கை வரன்முறையை
கற்றுத்தந்து சென்ற எம் அன்புத்தந்தையே...!
பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவது தான்
தந்தையின் வாழ்நாள் கனவு அந்தக் கனவுகள் மெய்ப்படும் நேரம்
எம் அருகில் நீங்களில்லையே...!
மீண்டும் ஒரு முறை அந்த முறுக்கிய மீசையுடன் உன் தோழில் தூக்கி
ஊர்த் திருவிழா காட்ட மாட்டாயா? என ஏங்குகிறது எம் மனம்...!

பிரிவால் துயருறும்:- மனைவி - ரோசா,
பிள்ளைகள் - சசி, றெஜி, உமேஸ், ரோஜன்.

(C- 8280)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஞானவாபி மசூதிக்கு செல்ல இந்துக்களுக்கு அனுமதி



(டில்லி)

ஞானவாபி மசூதிக்கு இந்துக்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

உத்தரப் பிரதேசத்தில் வாரணாசி என்கின்ற காசியில் உள்ள ஞானவாபி மசூதியை ஒட்டியுள்ள பழைமையான இந்துக் கோவிலான சிங்கார கௌரி கோவிலை வழிபட ஆண்டுக்கு ஒரு முறை தான் பக்தருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இது தொடர்பில் 5 பெண்கள் மனுத்தாக்கல் செய்ததை தொடர்ந்து நீதிமன்றம் தொல்லியல் ஆய்வுக்கு உத்தரவிட்டது.

ஆய்வின் போது அங்கு காணப்பட்ட சிற்பக்கலை, கட்டடக்கலைகள், மண் அடியில் புதைந்து கிடந்த தெய்வ சிலைகள், கோயில் தூண்கள், கல்வெட்டுகள் அடிப்படையில் தெற்கு நிலவறையில் இந்துக்கள் பூசை நடத்த வாரணாசி நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஙி)

## சிலி வனப்பகுதியில்

- 46 பேர் மூச்சுத்திணறி உயிரிழப்பு
- சுமார் 1000 வீடுகள் எரிந்து சேதம்
- 19 ஆயிரத்து 700 ஏக்கர் வனப்பகுதி எரி

(வோஷிங்டன்)


**அமெரிக்காவில் உள்ள சிலி மற்றும் மத்திய பகுதிகளில் இருக்கும் வனப்பகுதிகள் திடீரென தீ தொடங்கின. இதனால் அப்பகுதி முழுவதும் க சூழ்ந்துள்ளது.**

திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் அங்கிருந்த 1,000 வீடுகளுக்கு மேல் எரிந்து சேதமடைந்தன. 19 ஆயிரத்து 700 ஏக்கர் வனப் பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த தீ விபத்தில் சிக்கி 46 பேர் மூச்சுத்திணறி பலியாகினர். பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். விமானங்க

## ஐஸ்கட்டியால் நிரப்பப்பட்ட பெட்டிக்குள் 3 மணி நேரம் நின்று கின்னஸ் சாதனை



(போலந்து)

போலந்து நாட்டில் உலக சாதனைக்காக "ஐஸ்" கட்டிகளால் நிரப்பப்பட்ட பெட்டிக்குள் நிற்கும் போட்டி நடந்தது. இந்த போட்டியில் போலந்தை சேர்ந்த கட்டர்ஜினா ஜகு பவ்ஸ்கா மிக தைரியமாக பங்கேற்றார்.

அவருக்கு மருத்துவ சோதனை செய்யப்பட்டது. பரிசோதனை முடிந்ததும் அவர் 6 அடி உயரமான கண்ணாடி பெட்டிக்குள் நிறுத்தப்பட்டார்.

அவர் மீது "ஐஸ்" கட்டிகள் கொட்டப்பட்டது. அதை தொடர்ந்து கவுண்டவுன் தொடங்கியது.

அப்போது அவர் "ஐஸ்" பெட்டிக்குள் 3 மணி நேரம் 6 நிமிடம் 45 செக்கண்ட் நின்று கின்னஸ் சாதனை படைத்தார்.

அவரை அனைவரும் கை தட்டி ஆரவாரம் செய்து பாராட்டினர். மகிழ்ச்சி வெள்ளத்தில் அவர் வெளியே வந்தார்.

இந்த சாதனை குறித்து கட்டர்ஜினா ஜகுபவ்ஸ்கா கூறியதாவது,

இதுபோன்ற பனிக்கட்டி தொடர்பான போட்டிகளில் கலந்துகொள்ள எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. இதற்கு மன வலிமை , உடல் வலிமை அவசியம் தேவை. இதுபோல் மற்ற பெண்களும் தாங்கள் விரும்பும் துறைகளில் சாதிக்க முயற்சிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஙி)

## நமீபியாவின் ஜனாதிபதி ச



(வின்டோய்க்)

ஆபிரிக்க நாடான நமீபியா வின் ஜனாதிபதி நேற்று காலமாகியுள்ளார்.

நமீபியா தலைநகர் வின்டோயிக்கில் உள்ள மருத்துவமனை

ரிழந்துள்

இவர்

ஆண்டு

றாவது

பதவி யே

ப்பிடத்தக்

## ஜனாதிபதி வேட்பாளர் தேர்தல்

### தெற்கு கரோலினா மாகாணத்தில் ஜோபைடன் வெற்றி



(வோஷிங்டன்)

தேர்தல் இந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறுகிறது.

இதில் ஜனநாயக கட்சி சார்பில் மீண்டும் களமிறங்க தற்போதைய ஜனாதிபதி ஜோபைடன் திட்டமிட்டுள்ளார்.

இதையடுத்து அக்கட்சியின் வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுகிறார். இதில் தெற்கு கரோலினா மாகாணத்தில் நடந்த தேர்தலில் ஜோபைடன் வெற்றி பெற்றார்.

அவர் டீன் பிலிப்ஸ், மரியன்னே வில்லியம்சன் உள்ளிட்டோரை தோற்கடித்தார்.

குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் போட்டியிடுவது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது.

இதனால் ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் ஜோபைடன்-ட்ரம்ப் மோத உள்ளனர். (ஙி)

## பாரிஸ் ரயில் நிலையத்தில் கத்திக்கு



(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாரிஸின் புயசந னந டுலழை ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலில் மூவர்

கா

தெ

மா

அ

செ

இ

உ

சந்

க்க

ரன


கவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல் காட்டுத்தீ பரவல்

எரிந்து நாசம்

திய சிலி ஆகிய
ன தீப்பற்றி எரியத்
) கரும்புகையால்



ளின் உதவியுடனும் தண்ணீர் எடுத்து வரப்பட்டு தீ அணைக்கப்பட்டு வருகிறது.

கொளுந்து விட்டு எரியும் காட்டுத் தியால் அங்கு கரும்புகை மண்டலம் ஏற்பட்டு உள்ளது. அப்பகுதிகளில் இருளில் சூழ்ந்தது போல் புகை மண்டலம் பரவி உள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் அவதியடைந்துள்ளனர். அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்படுகிறார்கள்.

காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். விமானங்கள் மூலம் தண்ணீர் ஊற்றப்பட்டு வருகிறது. ஆனாலும் காட்டுத்தீ பயங்கரமாக எரிந்து வருகிறது. இதனால் தீயணைப்பு வீரர்கள் கடுமையாக போராடி வருகிறார்கள்.

தொடர்ந்து காட்டுத்தீ பரவி வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. மேலும் வெப்பநிலை 104 டிகிரி வரை உள்ளதால் வரும் நாட்களில் காட்டுத்தீ இன்னும் மோசமடைய வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. (நி)

## பாகிஸ்தானில் தேர்தல் அலுவலக வளாகத்தில் குண்டுவெடிப்பு


(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவது அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கட்சியின் வேட்பாளர் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் நேற்று தேர்தல் அலுவலக வளாகத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி மாநகரிலுள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்தின் கார் தரிப்பிட பகுதியிலேயே இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்தது.

இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)



## தி காலமானார்



வமனையில் அவர் உயி ந்துள்ளார்.

இவர் கடந்த 2015 ஆம் ண்டு நமீபியாவின் மூன் வது ஜனாதிபதியாக வி யேற்றிருந்தமை குறி டத்தக்கது. (நி)

# ஊரை நாசமாக்கிய எரிமலைக் குழம்பு
## மீண்டும் குடியேற முடியாத நிலையில் ஐஸ்லாந்து மக்கள்

(ஐஸ்லாந்து)

பனிப்பாறைகளாலும், எரிமலைகளாலும் சூழப்பட்டுள்ளதால், நெருப்பு மற்றும் பனியால் ஆன நாடு என ஐஸ்லாந்து அழைக்கப்படுவதுண்டு.

ஐஸ்லாந்து நாட்டு மக்களின் வாழ்க்கை முறையில், எரிமலைகளிலிருந்து "லாவா" எனப்படும் எரிமலைக் குழம்புகள் வெளிக்கிளம்புவதும், அவற்றின் சீற்றம் குறைந்த பிறகு ஊரை சுத்தப்படுத்தி மீண்டும் குடியேறுவதும் வழக்கமான ஒன்று.

சில தினங்களுக்கு முன், இந்நாட்டின் க்ரிண்டாவிக் பகுதியில் எரிமலைக்குழம்பு பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது.

இதையடுத்து, அப்பகுதியில் வாழ்ந்த சுமார் 3800 பேர், தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி விட்டனர்.

இம்முறை க்ரிண்டாவிக் பகுதியில் எரிமலை குழம்பு மொத்த ஊரையும் நாசம் செய்து விட்டதால், மீண்டும் அங்கு குடியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



நகரின் பல இடங்களில் நீண்ட தூரத்திற்கு பூமியில் பிளவு ஏற்பட்டு அதிலிருந்தும் லாவா வெளியேறியது.

க்ரிண்டாவிக் பகுதிக்கு அருகே உள்ள ஸ்வார்ட்ஸெங்கி புவிவெப்ப மின் நிலையத்திற்கு உள்ளே லாவா செல்வதை தடுக்கும் வகையில், அதற்கு வெளியே அரசு, தடுப்புகள் அமைத்துள்ளது.

இந்நகரின் 3 வீடுகளை லாவா மூழ்கடித்த காட்சிகளை தொலைக்காட்சியில் கண்ட மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இயற்கையின் சீற்றத்தால் வீடுகளை விட்டு வெளியேறி மீண்டும் குடிபுக முடியாத நிலையில் உள்ள மக்களில் பலருக்கு வீடுகளின் பேரில் வங்கிக் கடன் உள்ளதால், தங்கள் வாழ்வாதாரம் என்ன ஆகுமோ எனும் கவலையில் ஆழ்ந்துள்ளனர். (நி)

## திக்குத்து தாக்குதல்-மூவர் காயம்

காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் மாலி நாட்டைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கும் தீவிரவாத செயல்களுக்கும் எவ்வித தொ?டர்பும் இல்லை என்பதை பொ?லிஸார் உறுதிப்படுத்தினர்.

மேலும், தாக்குதலை நடத்திய சந்தேக நபர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியவரின் நோக்கம் தெளிவாக தெரிய வில்லை.

2024 ஒலிம்பிக் போட்டி களை பாரிஸ் நடத்துவதற்கு ஆறு மாதங்களுக்கும் குறைவாகவே காலம் உள்ள நிலையில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

2024 ஒலிம்பிக் போட்டிகளுக்காக பாரிஸ்க்கு 15 மில்லியன் பார்வையாளர்கள் வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் 100 மில்லியனுக்கும் அதிகமான பயணிகள் பிரான்சின் மிகப் பெரிய பிரதான ரயில் நிலையமான Gare de Lyon வழியாக பயணிப்பதாகவும் கூறப்படுகிறது. (நி)

# மியன்மாரில் 6 மாதங்களுக்கு அவசரநிலை நீடிப்பு

(மியன்மார்)

இராணுவ ஆட்சி இடம் பெற்று வரும் மியன்மாரில், மேலும் 6 மாதங்களுக்கு அவசர நிலை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரின் முன்னாள் தலைவரான ஆங்சான் சூச்சியின் ஆட்சி கலைக்கப்பட்டு, இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி 3 வருடங்கள் கடந்துள்ள நிலையிலேயே இவ்வறிப்பு வெளியாகியுள்ளது.

இராணுவ ஆட்சி தோற்றம் பெற்றதையடுத்து அந்நாட்டில் ஜனநாயக ஆதரவாளர்களின் கிளர்ச்சி, சண்டை மற்றும் போராட்டங்களை ஒடுக்குவதில் இராணுவம் திணறி வருகிறது.

இந்நிலையில் மூவாண்டாக நடப்பில் இருக்கும் அவசரநிலையை மேலும் 6 மாதத்துக்கு நீடித்துள்ள இராணுவத் தலைவர் மின் ஆங் ஹ்லைங் "இராணுவ ஆட்சியை எதிர்க்கும் அனைத்துச் சக்திகளையும் துடைத்தொழிப்போம்" என சூளுரைத்துள்ளார்.

இதேவேளை "மியன்மாரில் மக்கள் ஆட்சி ஏற்பட வேண்டும் என்று ஐ.நா தலைமைச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ்" வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கையாந்தகரை

**Botanical Name- Eclipto prostrota**
**Family- Asteraceae.**

நான்கு வகை உண்டு. வெள்ளை,சிவப்பு,நீலம், மஞ்சள் இனங்களாகும். பூக்களின் நிறத்தைக் கொண்டே இலை வகைப்படுத்தப்படுகிறது.இவற்றில் மஞ்சள் நிற இனங்கள் மருத்துவப் பண்புகள் நிறைந்தவை. இதனுடைய வேர், இலை, பூக்கள் யாவும் பயன்படுத்தலாம்.

பொதுவாக இது கல்லீரல், மண்ணீரல்,நுரையீரல், சிறுநீரகம் ஆகிய உறுப்புக்க ளில் வேலை செய்கிறது. இலைகள் சுரப்பிகளைத் தூண்டி பித்தநீர்,குருதி மற்றும் உடலுக்குத் தேவையான நீர்களை உற்பத்தியாக்கம் செய்கிறது.



அந்தந்த உறுப்புக்களுக்கு சக்தியையும் ஊட்டத்தையும் அளிக்கின்றது.அன்றியும் உடலில் இருக்கும் 7 உடற்கட்டுக்களையும் உரமாக்கி வலுவடையச் செய்து உயிரணுக்களை தேற்றி தங்க நிறம் போன்ற சருமத்தை உண்டாக்கும் குணமுடையது.

மஞ்சள் காமாலைக்கு கையாந்தகரை,தும்பையிலை கீழாநெல்லி இலைகளை சமனாக எடுத்து அரைத்து 5 கிராம் அளவு காலை, மாலை 7 நாட்கள் நோய் வன்மைக்கு ஏற்ப பசும்பாலில் எடுக்கவும்.

அல்லது கையாந்தகரை இலைச்சாற்றில் 8 மில்லியில் தொடங்கி இரண்டாம் நாளில் 16 மில்லி, இப்படியாக நாளுக்கு நாள் 8 மில்லி ஆக அதிகரித்து 10 நாட்கள் வரை கொடுத்து வரவும் காமாலை நோய் குணமாகும்.

இலைகளை சுத்தப்படு த்தி, வாயிலிட்டு மென்று பற்களைத் தேய்க்க பல் நோய்கள் நீங்கி பற்கள் சுத்தமாகி வெள்ளை நிறம் பெறும்.

இதன் இலைச்சாற்றை படர் தாமரை,சொறி, சிரங்கு போன்ற வற்றிற்கு பூசலாம். கையாந்தகரை இலை களை கழுவி சாறு எடுத்து 30 மில்லி அளவு 48 நாட் கள் தொடர்ந்து எடுத்துவர பித்தப்பை கற்களைக் கரைக்கும் தன்மையுண்டு. கையாந்தகரை இலைச் சாற்றில் அரிசித் திப்பிலியை ஊறவைத்து உலர்த்தி பொடியாக்கி 2 கிராம் அளவு காலை,மாலை எடுத்துவர ஆஸ்துமா. இருமல் குணமாகும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கையாந்தகரையுடன் 2 கடுக்காய் தோலைத் தட்டிப் போட்டு குடிநீர் காய்ச்சி 30 மில்லி அளவு எடுத்துவர மலச்சிக்கல் குணமாகும். கையாந்தகரைச் சாற்றில் சின்னச்சீரகம், நெல்லி வற்றல் இரண்டையும் சம அளவு ஊற வைத்து உலர்த்தி பொடியாக்கி தினமும் 2 கிராம் காலை, மாலை சாப்பிட்டால் இளநரை நீங்கும்.

இதேபோல் இளவயதில் நரை வருவதற்கு கையாந்தகரை இலைச் சாறு 600 மில்லி எடுத்து, அதேயளவு நல்லெண்ணெய்(600 மில்லி) சேர்த்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து சாறு வற்றியதும் பதத்தில் வடித்து, வார்த்துவரும் எண் ணெய் அளவிற்கு மீண் டும் அதேயளவு சாறு சேர்த்து அடுப்பேற்றி முன் போல் பதத்தில் வடித்து இவ் வாறு மொத்தமாக மூன்று தடவை செய்து, கையாந்தரை மடக்குத் தைலமாக தயாரித்து வைத்துக் கொள்ளவும். தினமும் இவ் எண்ணெயை தலைக்கு வைத்து வர இள நரை நீங்கி முடி கருமைநிறமாக வளரும். தைலத்தை அடி மயிரில் நன்றாக தேய்த்து வைக்க வேண்டும்.

கையாந்தகரையை கீரையாகவும் சமைத்து எடுக்கலாம்.குருதிச் சோகைக்கு சிறந்த கீரை. இரத்தத்தையும் விருத்தி செய்து. பருப்புடன் சேர்த்து சமைத்தும் சாப்பிடலாம். உடலில் ஏற்படும் வற ட்சியை போக்கி உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

வாரத்தில் இருமுறை யாக சாப்பிட்டு வந்தால் கண்பார்வையை தெளிவாக்கும். கையாந்தகரை மூலியிலிருந்து சூப்பும் தயாரித்து பருகலாம்.

சின்னவெங்காயம், உள்ளி, சின்னச்சீரகம், மிளகு அளவான நீரை கொதிக்க வைத்து மேற் கூறியவற்றை போட்டு நன்றாக கொதிக்க வைத்து கொதித்ததும் அளவாக கையாந்தகரை இலைகளை தண்டுடன் சேர்த்து கொதிக்கவிட்டு தேவையான அளவு இந்துப்பு (தமிழ் மருந்து கடைகளில் வாங்கலாம்) சேர்த்து கொதிக்கவிட்டு கீரை நன்கு வெந்ததும் வடிகட்டி எடுத்து தேவையான அளவு தேசிப்புளி விட்டு அருந்தலாம். இவ் சூப்பினை உணவு வேளைக்கு முன்பு எடுக்கலாம்.

ஈரல் நோய்கள், காமாலை போன்றவற்றிற்கு சிறந்தது. தோலை யும் நன்கு மிருதுவாக வைத்திருக்கக் கூடியது. வறட்டு இருமலுக்கு ஒரு மண்சட்டியில் அதி மதுரத்தை போட்டு சாறு விட்டு சாறுசுவறி உலர்ந்ததும் பொடித்து 2 கிராம் அளவு தேனில் குழைத்து உமிழ்ந்து சாப்பிட்டுவர வறட்டு இருமல் நீங்கும்.

# இன்று ஒரு தகவல் 27



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சொந்தம்

இந்த வீடு எனக்கு சொந்தம் என்று சொல்லுகின்றோம். அதுக்காக நாம் போற இடமெல்லாம் அந்த வீட்டையும் தோளில் தூக்கி வைத்துக் கொண்டா போகிறோம்?அது முடியாத காரியம். நாம் சொந்தம் என்று நினைக்கிற பல விடயம் நமக்கு சொந்தம் இல்லை. எட்டு லட்சம் ரூபா செலவு பண்ணி வீடு கட்டி இருப்பீங்க. பணம் உங்களுடையது என்பதால் அதில் பல்லியும் எட்டுக்கால் பூச்சியும் வாழாமலா போயிடுது?அதுகள் எல்லாம் அந்த வீடு தன்னோட வீடு தான் என்று நினைத்துக் கொண்டு இருக்கும்.!

இவரு பத்து லட்சம் ரூபா சொத்துக்கு அதிபதி என்று சொன்னார் ஒருத்தர். அவர் சொத்து எங்கே என்று கேட்டா கோட் கேஸ்ல இருக்கு. அதை ஜெயிச்சு தான் வரனும் என்கிறார். எது சொந்தம்? இது தான் கேள்வி? இந்த கேள்விக்கு ஞானிகள் என்ன பதில் சொல்லுகிறாங்க? அதை இப்போ பார்க்கலாம். ஒரு முனிவர் இருந்தார். முற்றும் துறந்த முனிவர். பற்றே இல்லாத பரமஞானி அவர். இன்றைக்கு ஒரு ஊரில் இருப்பார். நாளைக்கு ஒரு ஊரில் இருப்பார். ஒரு வேளை தான் சாப்பிடுவார். அதுவும் உப்பில்லாத சாப்பாடு . பொய் சொன்னா அவருக்கு பிடிக்காது. பொய் சொல்லுறவங்க வீட்டிலே சாப்பிட மாட்டார்.

ஒரு நாள் அவர் ஒரு ஊருக்கு போனார். அந்த ஊரில் யாரு உண்மையானவர் என்று கேட்டார். அதோ ஒரு மாடி வீடு தெரியுதே. அந்த வீட்டிலே ஒரு பண்ணையாளர் இருக்கிறார். அவர் ரொம்பவும் உண்மையானவர், நேர்மையானவர், அடியவர் மேல் பக்தி கொண்டவர், ஒரு லட்சம் செல்வம் கொண்டவர், நான்கு பிள்ளைகள் அவருக்கு உள்ளனர் என்று அருகில் இருந்தவர் சொன்னார். உடனே அந்த முனிவர் அந்த பண்ணையாளர் வீட்டுக்கு சென்றார். இதைப் பார்த்த உடனே உட்கார்ந்திருந்த பண்ணையாளர் உடனே எழுந்து ஓடி வந்து முனிவர் காலிலே விழுந்தார். சாப்பிடனும் என்றார் பண்ணையாளர். அவரோட அன்பு, அடக்கம் பணிவு இது எல்லாம் அந்த முனிவருக்கு பிடித்து போய் விட்டது. ஆனாலும் அவர் உண்மையானவர் தானா என்பதை பரிசோதிச்சு பார்த்துத்தான் அவர் வீட்டில் சாப்பிட வேண்டும் என்று முடிவு பண்ணினார் முனிவர்.

ஐயா! உங்களுக்கு செல் வம் எவ்வளவு உண்டு என்றார். சுவாமி என்னிடம் 22 ஆயிரம் ரூபாய் உண்டு என்றார். குழந்தைகள் எத்தனை பேர் என்று கேட்டார் "சுவாமி! எனக்கு ஒரே ஒரு மகன் என்றார்". உமக்கு எத்தனை வயது என்று கேட்டார். "சுவாமி என்னோட வயது மூன்று வருடம் ஐந்து மாதம் ஏழு நாள் பதினாறரை மணி என்றார். முனிவருக்கு கோபம் வந்து விட்டது. நீர் சொல்லுவது எல்லாம் பொய்யாக இருக்கிறது. உமது வீட்டிலே சாப்பிட்டால் என்னுடைய தவமே அழிந்து விடும் என்று சொல்லி புறப்பட்டார்.

பண்ணையாளர் பதறிப் போய் அவரின் காலில் விழுந்தார். "சுவாமி எனக்கு பொய் சொல்லத் தெரியாது. நான் சொல்வது எல்லாம் உண்மை தான் என்று சொன்னார். வரவு-செலவு புத்தகத்தை எடுத்து காட்டினார். அதிலே இருப்பு தொகை ஒரு லட்சம் ரூபாய் என்று இருந்தது. இருபத்து இரண்டாயிரம் என்று பொய் சொன்னீயே என்றார். "சுவாமி ஒரு லட்சம் பெட்டியிலே இருக்குது. இதோ பாருங்க 22 ஆயிரம் ரூபாய் தருமம் பண்ணி இருக்கேன். தருமம் பண்ணிய பணம் தானே என்னுடையது. பெட் டியிலே இருக்கிறது எப்படி எனக்கு சொந்தம் ஆகும் என்றார்.

முனிவருக்கு ஆச்சரியம்! சரி உனக்கு 4 பிள்ளைகள் என்று கேள்விப்பட்டேனே என்றார். எனக்கு பிறந்த பிள்ளைகள் நான்கு பேர் தான். ஆனால் எனது பிள்ளை ஒருத்தன் தான் என்றார். அது எப்படி என்றார் முனிவர். "மகனே நடராஜா" என்று கூப்பிட்டார் பண்ணையாளர். "சீட்டு விளையாடிக்கிட்டு இருக்கேன் வர முடியாது" என்றான் நடராஜன். "மகனே வேல்சாமி" என்று கூப்பிட்டார். ஏன் இப்படி கூச்சல் போடுகிறாய்? பேசாமல் இரு என்றார் வேல்சாமி. "மகனே சிவசாமி" என்று கூப்பிட்டார். உனக்கு புத்தி இருக்கா. ஏன் இப்படி அலட்டுகிறாய். இந்தப் பூமிக்கு சுமையாய் இன்னமும் ஏன் இருக்காய் என்று கூறினான் சிவசாமி. "மகனே கந்தசாமி" என்று கூப்பிட்டார் பண்ணையாளர். உடனே ஓடி வந்து கைகட்டி நின்று என்னப்பா வேணும் என்று கேட்டான் கந்தசாமி. இவன் ஒருத்தன் தான் என் பிள்ளை என்றார் பண்ணையாளர். சரி வயது விடயம் எப்படி என்றார் முனிவர்.

சுவாமி நான் ஒரு நாளைக்கு 1 1/2 மணி நேரம் தான் வழிபாடு செய்கிறேன். மற்ற நேரம் எல்லாம் இந்த உடம்புக்காக உழைக்கிறேன். அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது வருடம் ஆகுது . ஆனால் ஐந்து வயதில் இருந்து வழிபாடு பண்ணிய நேரம் தான் எனக்கு சொந்தம். அதை கூட்டி தான் வயது சொன்னேன் என்றார். முனிவர் ரொம்பவும் சந்தோசப்பட்டு அவரு வீட்டிலேயே சாப்பிட்டுப் போனாராம். இது பெரியவர் ஒருத்தர் சொன்னது. இதிலே இருந்து நமக்கு எது சொந்தம் என்று விளங்குகிறது இல்லையா? இந்த தகவலை உங்களிடம் சொல்லுவதற்கு முன்னாடி என் சிநேகிதர் ஒருத்தரிடம் சொன்னேன். (அவருக்கு வயது 50 இருக்கும்.) இப்ப சொல்லுங்க உங்க வயது எத்தனை என்றேன். அதுக்கு அவர் நான் இப்ப தான் பிறந்திருக் கேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர கிராம அலுவலரை நியமியுங்கள் அக்கராயன் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் கிராம அலுவலர் பிரிவிற்கு நிரந்தர கிராம அலுவலரை நியமிப்பதற்கு கரைச்சி பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கராயன் கிராம அலுவலர் பிரிவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பொன்நகரில் நிரந்தர கிராம அலுவலராக பணியாற்றுபவரே வாரத்தில் ஒரு நாள் அக்கராயனுக்கு பணிக்கு வருகின்றார். அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் 750 குடும்பங்கள் உள்ளன.

கிராம அலுவலர் நிரந்தரமாக இல்லாததன் காரணமாக தமது தேவைகளை பெற்றுக் கொள்வதில் கிராம மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

நிரந்தர கிராம அலுவலரை நியமிப்பதன் மூலம் அக்கராயன் மக்கள் தமது தேவைகளை இலகுவாக நிறைவு செய்து கொள்ள முடியும்.

நிரந்தர கிராம அலுவலரை நியமிப்பதற்கு கரைச்சி பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அக்கராயன் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

# நெல் உலரவிடும் தளங்கள் அதிகமாக அமைக்கப்பட வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்படும் நெல்லினை நெல் உலர விடும் தளங்கள் இல்லாததன் காரணமாக விவசாயிகள் தமது நெல்லினை போக்குவரத்து வீதிகளில் உலர விடுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

விவசாய கூட்டங்களில் தமது கிராமங்களில் நெல் உலர விடும் தளங்களை அமைத்துத் தாருங்கள் என விவசாயிகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில் பல கிராமங்களில் நெல் உலர விடும் தளங்கள் இல்லாததன் காரணமாக விவசாயிகள் நெல்லினை வீதியில் உலர விடுகின்ற நிகழ்வுகள் தொடர்கின்றன.

இதன் காரணமாக விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எதிர்காலத்தில் நெல் உலர விடும் தளங்கள் கூடுதலாக அமைக்கப்பட வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாகும். (நி-350)

# நிலக்கடலை அறுவடையில் நெருக்கடி

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலை செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நிலக்கடலையினை அறுவடை செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கூடுதலாக நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. நிலக்கடலை அறுவடை செய்யும் காலங்களில் நிலம் ஈரத்தன்மை உள்ளதாக இருக்கும்.

தற்போது ஈரத்தன்மை குறைந்திருப்பதன் காரணமாக நீர்ப்பாசனம் மேற்கொண்டே அறுவடை செய்ய வேண்டிய நிலையில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

நிலக்கடலைக்கு அறுவடையின் போது நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியாத விவசாயிகள் தூர இடங்களில் இருந்து நீரினை கொண்டு வந்து நிலத்தினை ஈரலிப்பாக்கி நிலக்கடலையை அறுவடை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது நிலக்கடலை அறுவடை செய்வதில் செய்கையாளர்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-350)

# வவுனியா சிறையிலிருந்து 12 கைதிகள் விடுதலை

(வவுனியா)

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதி களே இவ்வாறு விடுதலை செய்யப்பட் டனர். அதன்படி வவுனியா விளக்க மறியல் சிறைச்சாலையில் இருந்து 12 கைதிகள் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை சிறைச்சாலை அதிகாரிகள் கைலாகு கொடுத்து வீடுகளுக்கு வழியனுப்பி வைத்தனர்.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பொதுமன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் 600 சிறைக் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். (நி-250)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3032

**நிவேதா**




**பவானி**




**யுஸ்ரினா**




**டிபிஷா**




**சியானி**




**கனுசிகா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 397





விளக்கைப் பிடித்துக் கொண்டிருந்தவரின் கரம் முதலில் வெளிவந்தது. பிறகு புத்த பிக்கு ஒருவரின் திருமுகமும் காணப்பட்டது. வந்தியத்தேவன் அந்த இந்திரஜாலக் காட்சியை அடங்கா வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றான். மேலே என்ன நடக்கப் போகிறது என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தினால் அவன் மூச்சும் சிறிது நேரம் நின்றிருந்தது.

**முப்பத்தைந்தாம் அத்தியாயம்**
**இலங்கைச் சிங்காதனம்**

கையில் பிடித்த தீபத்தின் வெளிச்சத்தில் சுற்று முற்றும் பார்த்தார். இளவரசரும் அவருடைய தோழர்களும் நிற்பதைக் கண்டு கொண்டார் போலும். மறுகணம் விளக்கும் வெளிச்சமும் மறைந்தன. சிறிது நேரத்துக்கெல்லாம் பிக்கு தடாகத்தின் படிக் கட்டுகளின் வழியாக நடந்து வருவது தெரிந்தது. இளவரசர் நிற்குமிடத்துக்கு வந்தார். நிலா வெளிச்சத்தில் அவருடைய திருமுகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

"தேவப்ரியா! வருக! வருக! தங்களை எதிர்நோக்கி வைதுல்ய பிக்கு சங்கம் காத்திருக்கிறது. மகா தேரோ குருவும் விஜயம் செய்திருக்கிறார். குறிப்பிட்ட நேரம் தவறாது தாங்கள் வந்து சேர்ந்தது பற்றி என் உள்ளம் உவகை கொண்டு நன்றி செலுத்துகிறது!" என்றார்.

"அடிகளே! இந்தச் சிறுவனிடம் பல குறைகள் குடிகொண்டிருப்பதை அறிந்துள்ளேன். எனினும், வாக்குத் தவறுவதில்லை என்ற ஒரு நல்விரதத்தை அனுசரித்து வருகிறேன். அந்த விரதத்தில் என்றும் தவறியதில்லை!" என்றார் பொன்னியின் செல்வர்.

"இன்று சூரியன் அஸ்தமிக்கும் நேரம் வரையில் தாங்கள் வந்து சேரவில்லை என்று அறிந்தேன். அதனால் சிறிது கவலை ஏற்பட்டது."

"முன்னதாக வந்திருந்தால், ஒருவேளை வாக்கை நிறைவேற்ற முடியாமல் போயிருக்கலாம். அதனாலேயே சமயத்திற்கு வந்து சேர்ந்தேன்."

"ஆம், ஆம்! வானில் ஜோதிமயமாக ஒளிரும் கதிரவனை மறைத்து விடுவதற்குப் பல மேகத்திரள்கள் சுற்றி வருகின்றன. நாங்களும் அறிந்துள்ளோம். ஆனால் அந்த மேகத்திரள்கள் எல்லாம் புத்த பகவானுடைய கருணை யென்னும் பெருங்காற்றினால் சின்னாபின்னமாகிக் கலைந்து விடும். போகட்டும்! இதோ நிற்பவர்கள் யார்? தாங்கள் நன்கு அறிந்தவர்கள்தானா? தங்களின் பூரண நம்பிக்கைக்கு உரியவர்களா? கொடுத்த வாக்கைத் தவறாது நிறைவேற்றக் கூடியவர்களா?" என்று பிக்கு கேட்டார்.

"அடிகளே! என்னுடைய கரங்கள் இரண்டையும் எப் படி நான் நம்புகிறேனோ, அப்படியே இந்த நண்பர்களையும் நம்புகிறேன். எனினும் தங்களுக்கு விருப்பமில்லையென்றால் இவர்களை இங்கேயே விட்டு விட்டுத் தங்களுடன் தனித்து வரச் சித்தமாயிருக்கிறேன்!" என்றார் இளவரசர்.

"இல்லை, இல்லை! அவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள நான் சித்தமாயில்லை. தங்களை நான் அழைத்துப் போகும் இடம் மிகப் பத்திரமானதுதான். ஆயினும், நீண்ட வழியில் போக வேண்டும். எந்தத் தூணுக்குப் பின்னால் என்ன அபாயம் மறைந்திருக்கும் என்று யார் சொல்ல முடியும்? இவர்கள் இருவரும் அவசியம் வரட்டும்!" என்றார்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவனுடைய உள்ளம் கொந்தளித்தது. முன்பின் அறியாத தன்னிடம் இளவரசர் இவ்வளவு பரிபூரண நம்பிக்கை காட்டி மிக அந்தரங்கமான காரியத்துக்கு அழைத்து வந்ததை நினைத்து பூரிப்பு உண்டாயிற்று.

'இன்றிரவு ஏதோ முக்கியமான நிகழ்ச்சி நடைபெறப் போகிறது. எது என்னவாயிருக்கும்?' என்ற நினைவு மிக்க பரபரப்பை அளித்தது.

முன்னால் சென்று வழி காட்ட, மற்றவர்கள் பின் தொடர்ந்து சென்றார்கள். தடாகத்தின் படிக்கட்டுகளின் வழியாகச் சென்று பின்புறத்துக் கல் சுவரில் குடைந்து அமைந்திருந்த அறையில் புகுந்தார்கள். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முயலின் காது



ஒரு காட்டு பகுதியில் ஒரு சிங்கம் வாழ்ந்துகிட்டு வந்துச்சு.

அந்த சிங்கம் ஒரு நாள் ஒரு மானை வேட்டையாடி கொன்றுச்சு.

வேட்டையாடுன மானை திண்ணும்போது அந்த மானோட கொம்பு சிங்கத்தோட வாயில குத்திடுச்சு.

அதனால சிங்கத்துக்கு ரொம்ப கோபம் வந்திடுச்சு. இனிமே என்னோட காட்டில கொம்பு வச்ச எந்த மிருகமும் வாழக் கூடாது எல்லோரும் வேற காட்டுக்கு போய்டுங்கனு அறிவிச்சுச்சு.

இதை கேட்ட மான், ஆடுனு எல்லா கொம்பு வச்ச மிருகங்க[illegible] அந்த காட்டை விட்டு வேற காட்டுக்கு போயிடுச்சுங்க.

அங்க வாழ்ந்துகிட்டு இருந்த ஒரு முயல் ஒருநாள் [illegible]கிட்டு இருந்துச்சு. அப்ப வெயில் பட்டு அதோட நிழல் முயலுக்கு முன்னாடி விழுந்துச்சு. அப்ப பார்த்தா முயலோட காது கொம்பு மாதிரியே தெரிஞ்சது.

உடனே பயந்து போன முயலும் அந்த காட்டை விட்டு ஓடி போச்சு. அந்த புது காட்டில இருந்த மான் கிட்ட போய் நடந்ததை சொல்லிச்சு முயல்.

அதுக்கு அந்த மான் சொல்லுச்சு அடப்பாவி அந்த காட்டுல இருந்தாலாவது உனக்கு கொம்பு இருக்குனு நினைச்சுட்டு அந்த சிங்கம் உன்ன கொல்லாம விட்டிருக்கலாம். ஆனா இந்த காட்டுல இருக்கிற சிங்கம் உனக்கு கொம்பு இருந்தாலும் இல்லை என்டாலும் ஒருநாள் உன்னை வேட்டையாடியே தீரும்னு சொல்லுச்சு.

இத கேட்ட முயலுக்கு இப்ப ரொம்ப பயம் வந்துடுச்சு. நான் வேணும்னா அந்த காட்டுக்கே திரும்பி போயிடவானு கேட்டுச்சு முயல்.

அப்பத்தான் அந்த மான் சொல்லிச்சு உன்னை மாதிரி பயந்தவங்களுக்கு எங்க போனாலும் நிம்மதி கிடைக்காது அதனால இங்கேயே இருன்னு சொல்லிச்சு.

நீதி : அச்சம் உடையவருக்கு எங்கு சென்றாலும் நிம்மதி கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகமான சூழ்நிலையிலும் உறுதியான எண்ணங்களை உள்ளத்தில் நிரப்பினால் அவை நம் பாதைக்கு ஒளியூட்டி நமக்கு வழிகாட்டும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்புக்குரிய கிறிஸ்தவ சகோதரர்களுக்கு ஓர் அன்பு மடல்

அன்பு மிகுந்த தமிழ் கிறிஸ்தவ சகோதரர்களுக்கு அன்பு வணக்கம்.

நீண்ட நெடுங்காலமாக இக்கடிதத்தை எழுத வேண்டும் என எண்ணியிருந்தோம். இருந்தும் இக் கடிதம் தொடர்பிலான உங்களின் புரிதல் எவ்வாறாக அமையும் என்ற தெளிவின்மையால், கடிதம் எழுதுவது காலதாமதமாகியது.

இருந்தும் இனியும் பொறுமை காப்பது ஆரோக்கியமாக அமையாது என்ற அடிப்படையில் போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் நம் கடமையைச் சரியாகச் செய்து விடுவோம் என்ற அடிப்படையில் இக்கடிதத்தை எழுதுகின்றோம்.

கடந்த சில தினங்களுக்கு முன்னதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கிறிஸ்தவ கலை உலகங்கள் எனும் பொருளில் பன்னாட்டுக் கருத்தரங்கு நடைபெற்றது.

நல்லது. சமயங்கள் சமத்துவத்துக்கானவை என்ற வகையில் நோக்கம் தவறாமல் எந்தச் சமயத்தின் கருத்தரங்கு நடந்தாலும் அதனை இருகரம் கூப்பி வரவேற்க வேண்டும் என்பது நம் நிலைப்பாடு.

இருந்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற அக் கருத்தரங்கில் மங்கள விளக்கேற்றப்பட்டது.

நல்லது மங்கள விளக்கேற்றுவது எங்கள் தமிழர் பண்பாடு. இங்கு தமிழர் பண்பாடென்பது குடியேற்றவாதத்துக்கு முற்பட்ட நம் முந்தையர்களின் சைவத் தமிழ் பண்பாடென்பது புரிதற்குரியது.

என்ன செய்வது காலவழுபோல அந்நியர்கள் இலங்கையை கைப்பற்றியபோது, எங்கள் தமிழ்ச் சமூகம் சமய ரீதியாக உடைவுற்றது. கிறிஸ்தவ மதமாற்றத்தை அந்நியர்கள் தீவிரமாக்கினர். மதமாற்றத்தின் மூலமாக இலங்கை மீதான ஆக்கிரமிப்பை ஆழப்படுத்த முடியும் என்ற நோக்கில் அவர்கள் கடுமையாகச் செயற்பட்டனர்.

அதற்காக எத்தனையோ சைவாலயங்களை இடித்தழித்தனர். சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பின்பற்றியவர்களைக் கைது செய்து வதைத்தனர்.

இவ்வாறாக அவர்களின் கொடுமை நடந்ததாயினும், சுதந்திரத்துக்குப் பின்பு சைவத் தமிழர்கள் என்ற ஒட்டுமொத்த கூட்டுக் குடும்பம் உடைவுற்று கிறிஸ்தவமும் அதனுள் கலந்து கொண்டது.

ஆயினும் நம் முன்னவர்கள் கடைப்பிடித்த – நம் எல்லோரதும் தாய்ச் சமயமாகிய சைவ சமயத்தினூடாக விளைந்த தமிழ்ப் பண்பாட்டை மதபேதமின்றி நாம் அனைவரும் பின்பற்றினோம். அதற்குள் எங்களிடம் எந்தப் பேதமும் இருக்கவில்லை. சைவாலயங்களுக்கு கத்தோலிக்கசகோதரர்களும்தேவாலயங்களுக்கு சைவ மக்களும் பரஸ்பரம் சென்று வந்தனர்.

நெற்றியில் சந்தனத் திலகமிடுவதும் திருமணமான பெண்கள் குங்குமத் திலகம் தரிப்பதும் மங்கலகரமான நிகழ்வுகளில் கும்பம் வைத்து மகரதோரணம் இட்டு அலங்கரிப்பதும் எங்கள் ஆதிகால சைவத் தமிழ்ப் பண்பாடாயிற்று.

அதை அனைவரும் வாழையடி வாழையாகப் பின்பற்றினோம். ஆனால் இப்போது என்ன ஊழ்வினை வந்துற்றதோ தெரியவில்லை. எதிலும் மாற்றம். எதிலும் சமய அடையாளம். எதிலும் சமய எதிர்ப்பு என்ற மிக மோசமான நிலைமை வந்துற்றது.

அதற்கான ஓர் எடுத்துக்காட்டாக, யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் நடந்த மேற்படி கருத்தரங்கிற்கான மங்கள விளக்கேற்றலுக்குரிய குத்து விளக்கு வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டது. அது கிறிஸ்தவ அடையாளத்தை பெரிது படுத்தக் கூடிய குத்து விளக்காக இருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில். இருக்கக்கூடிய குத்துவிளக்குகளைப் புறந்தள்ளி, அந்தக் குத்துவிளக்குகள் தீண்டத்தகாதவை என்பதுபோல காட்டி, கிறிஸ்தவ இலட்சனை பொறிக்கப்பட்ட குத்து விளக்கை வைத்து மங்கள விளக்கேற்றுகின்ற அளவில் கருத்தரங்கின் ஏற்பாட்டாளர்களின் மனம் சிறுமைத்தனம் கொண்டு விட்டதோ என்று நினைக்கும் போது உண்மையாகவே இதயம் வேகிறது.

ஆம், நடராஜர் சிலையை வைத்து நடன அரங்கேற்றம் செய்த திருமறைக் கலாமன்றத்தின் பிதாமகர் மரியசேவியர் அடிகளாரை நினைத்துப் பார்க்கின்றோம். திருவாசகத்தின் பெருமை பற்றி பேசிய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரை எண்ணிப் பார்க்கின்றோம். மனம் உருகிப் போகிறது.

ஆனால் இப்போது சைவப் பெருவள்ளல் சேர்.பொன் இராமநாதன் ஈந்தளித்த திருமண்ணில் குத்துவிளக்கையே மாற்றுகின்ற குரோதம்.

ஐயகோ! எம் தமிழினம் சமய பேதத்தால் அழியப் போகிறதே என்று நினைக்க கண்கள் குளமாகின்றன. இனியேனும் எங்கள் எதிர்காலம் தமிழால் – தமிழ் இனத்தால் நடந்தாகட்டும்.

# யாழில் தேசியக் கொடி பறந்த இன்றைய நாளே சுதந்திரநாள்

## சரத்வீரசேகர பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தேசியக்கொடியை ஏந்தியவாறு தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை கொண்டியதை வரவேற்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், இராணுவத்தில் இருந்த போது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சேவை செய்துள்ளேன். தனிப்பட்ட ரீதியில் தமிழ் மக்களுக்கு நான் இரத்த தானம் செய்துள்ளேன்.

இன்று தமிழ், தமிழ் மக்கள் என பேசிவருவோர் தமிழ் மக்களுக்காக இரத்தம் கொடுத்திருக்கின்றார்களா? என கேட்க விரும்புகின்றேன்.

வடக்கில் உள்ளவர்கள் விடுதலைப் புலிகளின் கொடியை தவிர்த்து விட்டு இன்று நாட்டின் தேசியக் கொடியை ஏந்திக் கொண்டு சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றனர். இதுவே உண்மையான சுதந்திரம் ஆகும்.

யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடியை ஏந்தியவாறு பொதுமக்கள் சுதந்திரத்தை கொண்டாடியதை வரவேற்கின்றேன்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திர தினத்தை சந்தோஷமாகக் கொண்டாடி வருகின்றமை அனைவரும்அறிந்தவிடயம்.

இந்த வருடம் யாழ்ப்பாண நகரில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் தேசியக் கொடியினை ஏந்தியவாறு இலங்கையில் 76 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடியமை வரவேற்கத்தக்க விடயம்.

இன்று தான் யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைத்த நாளாக இருக்கும். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக சுதந்திர தினத்தை கொண்டாடியதை நான் நேரில் பார்வையிட்டேன். அதுதான் உண்மையான நல்லிணக்கம்.

ஆனால், தமிழ் மக்களின் இந்த சுதந்திரமான நிலைமையினை குழப்புவதற்கு ஒரு சிலர் சூழ்ச்சி செய்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

# எதிர்க்கட்சியின் கூட்டணியை பிளவுபடுத்த பாரிய சதித்திட்டம்

## ஐ.ம.ச பாராளுமன்ற உறுப்பினர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் உருவாக்கப்பட உள்ள மிகப் பெரிய அரசியல் கூட்டணியை சீர்குலைத்து, பிளவுப்படுத்த ஒரு அணிக்கு அரசியல் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாக அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனடிப்படையில், இந்த அணியினர் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி அமைக்கப்படும் நடவடிக்கைகளை சீர்குலைப்பதற்காக கட்சிக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இந்த செயலில் ஈடுபட்டுள்ள நபர்கள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் தலைமையிடம் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நபர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கட்சியின் தலைமையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிய வருகிறது.

இந்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது போனால், முக்கியமான சந்தர்ப்பம் ஒன்றில், இவர்கள் புதிய கூட்டணிக்கு மட்டுமல்லாது கட்சிக்கும் அரசியல் ரீதியான பாரிய சேதத்தை ஏற்படுத்துவார்கள் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர். (ந-7)

# பஸிலின் வருகையின் பின்பே ஜனாதிபதி வேட்பாளர் குறித்து மொட்டுக் கட்சி தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை மக்கள் கேட்கின்றனர். எனவே, அது தொடர்பில் விரைவில் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை எடுங்கள் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப்பீடத்திடம் அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி தமது கட்சி வேட்பாளராக தற்போதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பெயரிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி தமது கட்சி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவைப் பெயரிட்டுள்ளது.

அதே வேளை, தேசிய மக்கள் சக்தி அநுரகுமார திஸா நாயக்கவைக் களமிறக்கவுள்ளது. எனினும், தமது கட்சி வேட்பாளரை நிறுத்துமா? அல்லது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குமா? என்பது தொடர்பில் மொட்டுக் கட்சியின் எம்.பிக்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் குழப்பம் நிலவுகின்றது.

இது நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்பவுள்ளார், அவர் நாடு திரும்பிய பின்னர் விசேட கூட்டமொன்றை நடத்தவுள்ளார். அந்தக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் குறித்த மொட்டுக் கட்சியின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்படவுள்ளது. (ந-7)

# அதிவேக நெடுஞ்சாலையில் குறைந்த வேகம் குற்றம்

அதிவேக நெடுஞ்சாலையில் குறைந்தபட்ச வேகத்தை விட குறைவான வேகத்தில் வாகனம் ஓட்டும் ஓட்டுனர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு முடிவு செய்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் பதிவாகும் பெரும்பாலான விபத்துகளுக்கு ஓட்டுனர்கள் குறைந்த வேகத்தில் வாகனம் ஓட்டுவதாலேயே ஏற்படுவதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, அதிவேகமாக வாகனம் செலுத்துவது தொடர்பில் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தப் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தீர்மானித்துள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

16

மகாமுதலியார்களது அலுவலகமானது ஆளுநர்களது அலுவலகத்தில் அவர்களது உதவியாளர் நிலையின் கணிக்கப்பட்டு, எந்நேரமும் கண்டிய மக்களது கொள்கைகள், நிலப்பகுப்பு முறைகள், பிரச்சினைகள், உள்ளூர் நிர்வாகிகளை நியமனம் செய்யும் முறைமை போன்ற விடயங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் நிலையில் பரிபாலிக்கப்பட்டிருந்தமையைக் காண்கின்றோம்.

இவ்வாறு பொதுவாக ஒல்லாந்த ஆள்பதிக்கு சிங்களக் கிறிஸ்தவர்களே ஆலோசனைகளை வழங்கி, உதவி வந்துள்ளனர். வடக்கில் முதலியார் முகாந்திரம் போன்ற பதவிகளுக்கு செல்வாக்குள்ள கிறிஸ்தவத் தமிழதிகாரிகளிடமிருந்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சுதேச நிர்வாக அலுவலர்களுடனான ஒல்லாந்து அரசின் பரஸ்பரத் தொடர்புகள் மிகவும் இக்கட்டான ஒரு நிலையிலேயே தொடர்ந்து வந்துள்ளது. ஒல்லாந்து நிர்வாக அதிகாரிகள் எப்பொழுதுமே சுதேசிய நிர்வாகிகள் மீது அவநம்பிக்கையுடையவர்களாக இருந்து வந்துள்ளனர்,

அதேநேரத்தில் தமது சொந்த உடல் - உடைமைப் பாதுகாப்பு முறையை உறுதிப்படுத்திய வகையிலேயே தொடர்ந்தும் கடமையாற்றியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வுள்ளூர் சுதேசிய உத்தியோகத்தர்கள் மிதமிஞ்சிய செல்வாக்கினையும் அதிகாரத்தையும் தம்முடன் கொண்டிருந்ததன் அடிப்படையே ஒல்லாந்து அரசாங்கத்துக்கு கவலையளித்த விடயமானது. ஒல்லாந்து ஆள்பதிக்கு ஒவ்வொருவருமே தமக்கு அடுத்த நிலையில் இருக்கக் கூடிய உதவியாளிடம் எப்போதுமே உள்ளூர் உத்தியோகத்தர்களின் மிதமிஞ்சிய செல்வாக்கு நிலைகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்த வண்ணம் இருந்தனர்.

நிலவருவாயைச் சேகரிக்கும் நடைமுறையிலும் நீதி வழங்கும் நிர்வாக நடைமுறையிலும் பலம் வாய்ந்தவர்களாக விளங்கிய இந்த உள்ளூர் தலைவர்கள் மக்களை நேரடியாக எதிர்ப்பதிலும் ஊழல் புரிவதிலும் ஈடுபட்டிருந்தனர். இதனால் 1740ஆம் ஆண்டில் இம்மோவ் என்ற ஆள்பதி திசாவை அதிகாரிகளை வரவழைத்து காலத்துக்குக் காலம் உள்ளூர்த் தலைவர்களை அடிக்கடி மேற்பார்வையிட வேண்டும் எனவும் அந்தந்தப் பிரதேசத்து மக்கள் உள்ளூர்த் தலைவர்களுக்கெதிராக எழுப்பியுள்ள புகார்களை அடிப்படையாகக் கொண்டு, மக்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்குமாறும் உத்தரவு இட்டிருந்தார்.

1762ஆம் ஆண்டில் ஸ்க்றுடர் என்ற ஆள்பதி விதானைமாரின் அடாவடித்தனத்தையும் சட்டரீதியற்ற வகையில் வறுமையான மக்கள் மத்தியிலிருந்து சேகரிக்கப்படும் வருமான முறையையும் கண்டித்ததோடு அவ்வாறான சம்பவங்களைக் கண்டுபிடித்து, ஒழிப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தமையைக் காண்கின்றோம்.

கண்டி இராச்சியத்துடனான உறவு நிலை சீரழிந்து போயிருந்த காலங்களில் ஒல்லாந்தர் மீது உள்ளூர்த் தலைவர்கள் வைத்திருந்த விசுவாசத்தில் சந்தேக நிலைகள் கூடத் தோற்றம் பெற்றிருந்தன. வான் கேயன்ஸ் இந்நிலையை மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார். அதாவது இரண்டாம் இராஜசிங்கனுடன் கடுமையான யுத்தம் நடத்திக் கொண்டிருந்த வேளைகளில் உள்ளூர்த் தலைவர்கள் ஒல்லாந்து அரசு மீது காட்டியிருந்த விசுவாசத்தின் தன்மையை வான் கேயன்ஸ் பரீட்சித்துப் பார்த்திருந்தார். கண்டியரசுடனான போர் நடைபெற்ற நாட்களில் உள்ளூர் நிர்வாக முகாமைத்துவம் அப்படியே ஸ்தம்பித்து விட்டிருந்த சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. சுதேசிய நிர்வாகிகளால் அவ்வாறான காலகட்டங்களில் உள்ளூர் நிர்வாக நடைமுறைகளை மேற்கொள்ளாது கைவிட்டு விடுகின்ற ஒரு போக்கினை ஒல்லாந்தர் காலத்தில் காண முடிந்தது.

ஸ்க்றுடர் வான் எக் ஆகியோர் ஆள்பதிகளாக விளங்கிய காலங்களிலும் (1750 - 1760) அத்தகைய போக்கே நிலவியது. இன்னும் உள்ளூர் நிர்வாகிகளது தயவிலேயே உள்நாட்டு நிர்வாக முறைகளை நடைமுறைப்படுத்துவதில் ஒல்லாந்து அரசாங்கம் தங்கியிருந்தது. இவ்வுள்ளூர் நிர்வாகிகளது தேவை நிலவரமான நிதியீட்டம் தொடர்பான அறிவு, பாரம்பரிய விவசாய விளைநிலங்களின் தகவுத் திறன், நிலப்பங்கீட்டு வழமை போன்ற விடயங்களில் மிகவும் அவசியமாகக் காணப்பட்டது. ஆகவே இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் முழுவதிலுமாக அரசுக்கும் உள்ளூர் ஆட்சியாளர்களுக்குமிடையே சற்று சிக்கலான உறவு தொடர்ந்து இருந்து வந்தமையைக் காண்கின்றோம்.

இவ்விதமாகக் கரையோர மாநிலங்களின் உள்ளூராட்சிக்கும் பரிபாலனத்துக்கும் திசாவைகளே பொறுப்பாயிருந்தனர். உள்ளூர் வியாபாரம், காணிகளில் பயிரிடுதல், திறைகளையும் வரிகளையும் சேகரித்தல், பயிர்களை விருத்தி செய்தல் எனும் முயற்சிகளுடன் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் யாவும் அவர்கள் கைகளிலேயே விடப்பட்டன. திசாவைகள் மூவரும் மூத்த வணிகரும் ஒல்லாந்தராகவே இருந்தனர்.

பரிபாலன விடயமாக டச்சுக்காரர் இன்னுமொரு சேவையையும் ஏற்படுத்தினர். அதுதான் மத சம்பந்தமான சேவை. இது இரண்டு பிரிவுகளாக இருந்தது. குருத்துவ அபிஷேகம் செய்யப்பட்ட போதகர்மார் மேற்பிரிவினர், நோயாளிகளைத் தரிசித்து அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதையும் வேறும் சிறு கடமைகள் புரிவதையும் பிரதான கடமைகளாகக்கொண்ட ஏனையோர் கீழ்ப் பிரிவினர். மதசம்பந்தமான சேவையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டனவாய் ஸ்கொலர்ஷேன் என்று டச்சுப் பாஷையில் வழங்கப்பட்ட பாடசாலைச் சபையும் டயஸ்னேற் என்ற கோயிற்சபையும் இருந்தன. பாடசாலைச் சபையானது பாடசாலைகளையும் போதகர்மாரைப் பயிற்றும் கலாசாலைகளையும் மேற்பார்வை செய்து வந்தது.

கடைசியில் கூறப்பட்ட கலாசாலைகளை செமினரிகள் என ஆங்கிலத்தில் வழங்குவர். இத்தகைய செமினரிகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருந்தன. போதகர்மாரையும் கம்பனியின் இராச்சிய பரிபாலன வேலையைச் செய்யும் சிவில் சேர்விஸ் உத்தியோகத்தரையும் பயிற்றுவது இவற்றின் கடமையாக இருந்தது.

கிறிஸ்தவ சுவிசேஷங்களை ஜனங்களுக்குப் போதிப்பதில் டச்சுக்காரர் மிகவும் ஆர்வம் கொண்டவராய் அச்சுவிசேஷங்களைச் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்தனர். டபிள்யூ. கொனின் என்பவர் சுவிசேஷங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்த்தார். இம்ஹோவ் தேசாதிபதி 1738ஆம் ஆண்டு ஓர் அச்சு இயந்திரசாலையை நிறுவி அதிலிருந்து பல சிங்கள நூல்களும் தமிழ் நூல்களும் பிரசுரிக்கச் செய்தார். தமிழில் புதிய ஏற்பாடு முழுவதும் (1758), சிங்களத்தில் செபமாலைக் கொத்துமீ (1788), காலு சுவிசேஷங்களும் (1739) டச்சுக்காரரால் வெளியிடப்பட்டன. சுருங்கக் கூறுங்கால் டச்சுக்காரர் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ இலக்கியம் ஒன்றைத் தமிழிலும் சிங்களத்திலும் உருவாக்கினர்.

### டச்சுக்காரரின் கல்விமுறை

டச்சுக்காரரின் கல்விமுறை மாகாண வித்தியா சபைகள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டது. இச்சபைகள் அவ்வவ் மாகாணத் திசாவைமார், போதகர்மார் என்பவர்களின் பொறுப்பில் இருந்தன. கொழும்புப் பகுதியில் 48 பாடசாலைகளும் காலிப் பகுதியில் 87 பாடசாலைகளும் யாழ்ப்பாணப் பகுதியில் 48 பாடசாலைகளும் இருந்தன. வருடந்தோறும் டச்சுப் போதகர்மார் இப்பள்ளிக்கூடங்களுக்கு விஜயம் செய்து மாணவரைப் பரீட்சை செய்வர்.

அப்படி அவர்கள் விஜயம் செய்யும் போது புதுமணமாகும் தம்பதிகளுக்கிடையே விவாகக் கிரியைகளும் பிள்ளைகளுக்கு ஞானஸ்தானமும் செய்வர். இப்பாடசாலைகளில் புரட்டஸ்தாந்து மதத்தின் மூலாதாரக் கொள்கைகளே பிரதானமாகக் கற்பிக்கப்பட்டன. சிங்கள, தமிழ், டச்சுப் பிள்ளைகளுக்கு வேறுவேறாகவே பாடசாலைகள் இருந்தன. சாதாரண பாடசாலைகளைவிட தொழிற் பாடசாலைகளும் அநாதைகள் படிக்கும் பாடசாலைகளும் இருந்தன. இவை டச்சுப் பிள்ளைகளின் உபயோகத்துக்காகவே ஏற்படுத்தப்பட்டன.

கிறிஸ்தவ சமயத்தைச் சுதேசிகள் தழுவும்படி செய்ய அவர்களுக்குப் பலவிதத்திலும் ஆசைகள் ஊட்டப்பட்டன. இதன்பயனகச் சில கிராமங்களில் உள்ளவர்கள் அனைவரும் அப்படியே கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர் என்று மேலே சொல்லிய பாடசாலைகள் சம்பந்தமான பத்திரங்களில் இருந்து அறியலாகும். சுதேசக் குடும்பங்கள் பற்றிய தகவல்களையும் இப்பத்திரங் ள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

### நீதி பரிபாலனம்

டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியின் வர்த்தகம் செழித்தோங்கி அதன் பயனாக அது நல்ல இலாபம் அடைய வேண்டுமானால் நாட்டிலே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது இன்றியமையாததென்பதை டச்சுக்காரர் உணர்ந்து அவற்றை நிலைநாட்டுவதிற் சிரத்தை கொண்டனர்.

அவர்கள் தேசவழமை போன்ற சுதேசச் சட்டங்களை ஒழுங்காக்கினர். ரோமன் டச்சுச் சட்டம் என்ற சட்டத்தை இந்நாட்டின் நீதிபரிபாலன விடயத்திற் கொண்டுவந்தவர்களும் அவர்களே. டச்சுச் சட்ட நிபுணர்களால் நன்கு ஆராய்ச்சி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டதே இச்சட்டம். சாதி, சாதி உரிமைகள் என்பவற்றை ஆதாரமாகக்கொண்ட பழைய மானிய முறைச் சட்டங்களை இலங்கையில் தகர்த்தெறிவதில் டச்சுக்காரர் புகுத்திய ரோமன் டச்சுச் சட்டம் பெருந்துணை செய்தது எனலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாரின்...

கோரமுகத்தை சர்வதேச சமூகத்தின் கண்களிற்கு கொண்டு வந்திருக்கின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் பொலிஸார் மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில் நடந்து கொண்டனர். பல மாணவர்கள் பொலிஸாரால் காவித் தூக்கிச் செல்லப்பட்டனர்.

பெண் பொலிஸார் இல்லாமல் பெண்கள் இழுத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களைத் தூக்கி வாகனத்தில் வீசினார்கள்.

கிளிநொச்சியில் ஊர்வலம் வருகின்றபோது தண்ணீர்த்தாரை வாகனத்துடன் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசிய பொலிஸார் மிகவும் மிலேச்சத்தனமாக நடந்துகொண்டார்கள்.

ஜனநாயக அடிப்படையில், தனக்கிருக்கின்ற மனித உரிமைகளின் அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுத்த பல்கலைக்கழக மாணவர்கள் பொதுமக்கள் மீது மிகவும் மோசமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் பொலிஸார் நடந்துகொண்டமை வரலாற்றில் மீண்டும் ஒருமுறை இலங்கையில் பொலிஸாரின் அடாவடித்தனத்தை அடையாளப்படுத்தியுள்ளது.

மாணவர்கள் பலர் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள். இதுவெல்லாம் நடைபெற்ற பின்னர் ஐந்து மாணவர்கள் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.

இதனால் அந்த மக்கள் பிற்பகல் 3.30 மணிவரை காத்திருந்தார்கள். அவர்களை விடுதலை செய்யும்வரை வெளிக்கிடமாட்டோம் என சபதம் செய்தார்கள். பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனும் பல்கலைக்கழக மாணவர்களும் பொலிஸ் நிலையம் சென்று அவர்களை விடுவித்துக் கொண்டு வந்த பின்னர்தான் இந்தப் போராட்டம் முடிவிற்கு வந்திருக்கின்றது எனவும் சிறீதரன் தெரிவித்துள்ளார். (ந-7)

## வாகன...

ஏற்பட்டது.

இந்த நிலையில் மாற்று வீதிகள் பயன்படுத்தப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் மாற்று வீதியால் பயணித்த இரு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில், கணேசபுரம் பகுதியில் காரும் வானும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் கடும் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

விபத்தில் வானில் பயணித்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,100)

## தமிழில்...

இந்நிகழ்வின் நிறைவாக தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இவ்வழமை தவிர்க்கப்பட்டு சுதந்திர தின நிகழ்வின் ஆரம்பத்திலும் நிறைவிலும் தனிச் சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பொலிஸாரின் அடா...

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி கிளிநொச்சியில் நேற்று தமிழர் தரப்பு மேற்கொண்ட எதிர்ப்புப் பேரணியின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை, தடியடி நடத்தியதால் பெரும் களேபரம் ஏற்பட்டது.

இதனால் ஏ9 வீதியில், இரணைமடுவுக்கு அண்மித்த பகுதி போர்க்களம் போல் காட்சியளித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இரணைமடுச் சந்தியில் இருந்து போராட்டம் ஆரம்பித்து, கிளிநொச்சி நகரை நோக்கி நகர்ந்த போது, பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வீதியின் குறுக்கே தடுப்பு அமைத்து, பேரணியைத் தடுத்தனர். இந்தப் பேரணியில் பங்கேற்க 5 பேருக்கு நீதிமன்றம் தடை பிறப்பித்திருந்த நிலையில், பொலிஸார் பேரணியை நகர அனுமதிக்கவில்லை. பொலிஸாரின் எதிர்ப்பையும் மீறி பேரணியானது முன்னோக்கிச் செல்ல முற்பட்டவேளை, பொலிஸாரால் பேரணியின் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டதுடன், தடியடியும் மேற்கொண்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் தரதரவென வீதியில் இழுத்துச் செல்லப்பட்டனர். மாணவர்களைக் காப்பாற்றுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் முயன்றனர்.

பொலிஸாரால் இழுத்துச் செல்லப்பட்ட மாணவன் ஒருவரைக் காப்பாற்ற சிறீதரன் எம்.பி. முற்பட்டவேளை பொலிஸார் சிறீதரன் எம்.பி.யைத் தாக்கியதுடன் பொலிஸாரால் 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கவிதரன், மிதுசன், எழில்ராஜ், அபிசேக், நிவாசன் ஆகியோரே கைது செய்யப்பட்டனர். இதையடுத்து கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி ஏ9 வீதியின்ஒருபகுதியை மறித்து போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. நீண்ட இழுபறியின்பின் மாணவர்களின் விடுதலை தொடர்பான பேச்சுவார்த்தைக்காக பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இருவர், ஆசிரியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் சென்றனர். அவர்கள் அங்கு நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் கைதான 5 மாணவர்களும்பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதன் பின்னர் போராட்டம்நிறைவுக்கு வந்தது.
(ந-7,33,100,315)

## ஒற்றை...

முற்பட்டால் அது ஒற்றையாட்சிக்கும் அச்சுறுத்தலாக அமையும் என சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைகளுக்கு தற்போது அதிகாரம் இல்லை, உள்ளூராட்சி சபைகளுக்கும் அதிகாரம் இல்லை, ஏனெனில் அதற்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லை. தற்போது பிரதமர் ஆட்சி ம்முறை பற்றிப் பேசப்படுகின்றது.

இது ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான நகர்வாக இருக்கலாம் என்ற ஐயமும் ஏற்படுகின்றது.

அதேபோல பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடித்துக்கொண்டு ஆட்சியை தொடர்வதற்கான திட்டமும் இதன் பின்னணியில் உள்ளதா? என்ற சந்தேகமும் எழுகின்றது.

இது, தேர்தலை இழுத்தடிப்பதற்கான நகர்வாக அமைவதுடன் இது பயங்கரமான நிலைமையை நாட்டில் ஏற்படுத்தக்கூடும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை வைத்துக்கொண்டு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க முற்பட்டால் ஒற்றையாட்சிக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என்றார். (ந-7)


தன நிதானய
திகதி - 2024.02.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1410
I 07 09 29 74 I
Double Chance இலக்கம் 54607
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

மெகா பவர்
திகதி 2024.02.04
சீட்டிழுப்பு இலக்கம் 1728
A 18 50 59 65 75
Double Chance 99898

மஹஜன சம்பத
திகதி 2024.02.04
சீட்டிழுப்பு இலக்கம் 5380
D 9 1 3 1 2 7

லக்கி 7 VIP
திகதி 2024.02.04
சீட்டிழுப்பு இலக்கம் 206
J 6 4 4 0 1 2 J

கொவிசெத
திகதி 2024.02.04
சீட்டிழுப்பு இலக்கம் 3622
V 01 13 16 67
V 17151
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.04
சீட்டிழுப்பு இலக்கம் 689
13 39 40 46
31935 04
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2354 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.04 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 29 43 46 70 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,831,888.80
47818
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.02.2024 வெற்றி வாரம் 088
P 0 9 8 8 2 5
60614
அடுத்த சுப்பர் ஜக்பொட் 28,329,960.00
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

சனிதா
திகதி 2024.02.04 வெற்றி வாரம் 4515
15 45 64 74 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,247,271.20
ரூ. 100,000/- 49565
DLB

சசிரி
வாரம் 437
சீட்டிழுப்பு திகதி 2024.02.04
வெற்றி இலக்கங்கள் 16 17 47
06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,229,960/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4066 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.02.04 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 24 42 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,560,852.40
863435
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 14 06 44 51 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 501,984,686.20
1530 மஞ்சள் 04.02.2024 ஞாயிறு
DLB தொலை பேசி 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2180
சீட்டிழுப்பு திகதி : 2024.02.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,791,231.20
அத கோட்டிபதி ADA KOTIPATHI
11 53 55 61 S
768893
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரிநாள்...

சுதந்திர தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் நேற்று முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது. அத்துடன், இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவிருந்த 17 பேருக்கும் தனிப்பட்ட தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இருப்பினும் மட்டக்களப்பில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் இந்தப் போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 17 பேர் தவிர்ந்த, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், மதகுருமார்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர். (ந-7)

## சுதந்திர தின...

இந்திய தூதுவரும் பங்குபற்றவில்லை.

சுதந்திர தின நிகழ்வுக்கு கொழும்பிலுள்ள அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு தூதுவர்கள் அழைக்கப்படுகின்றமை மரபாகும். ஆனால் இம்முறை தூதுவர்கள் பங்குபற்றவில்லை.

சுதந்திர தின நிகழ்வுக்கு சீன சார்புடைய தாய்லாந்துப் பிரதமர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டமையே அமெரிக்க, இந்திய தூதுவர்கள் பங்குபற்றாமைக்கான காரணம் என கொழும்பு உயர் மட்ட அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு 4 பில்லியன் வரை நிதி உதவி வழங்கிய இந்தியா மேலும் பல உதவிகளை வழங்குவதற்கும், இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்குரிய முதலீடுகளையும் வழங்கிவரும் நிலையில் சீன சார்பு போக்கை இலங்கை வெளிப்படுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

# சுதந்திர தினத்தை எவ்வாறு அபிமானத்துடன் கொண்டாடுவது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

(கொழும்பு)

நாம் 76 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. நாடு யாருக்கும் அடிமையாகாமல் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாத்து சுதந்திரமான நாடாக செயல்படுகிறது. ஏகாதிபத்திய சக்திகளின் கீழ் காலனித்துவ நாடாக இல்லாவிட்டாலும் அரசியல் சுதந்திரமும், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரமும், பொருளாதார சுதந்திரமும் இல்லாத நாட்டில் சுதந்திர தினத்தை நாம் எவ்வாறு அபிமானத்துடன் கொண்டாடுவது? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 83 ஆவது கட்டமாக காலி ஹபுகல மகா வித்தியாலயத்திற்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மீறி சபாநாயகர் தலைமையிலான அரசாங்கம் நிகழ்நிலை காப்பு சட்டத்தை நிறைவேற்றியது.இதனூடாக பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம், உண்மையை வெளிப்படுத்தும் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் என்பன பறிக்கப்பட்டுள்ளது.வங்குரோத்து நிலைமையால் 220 இலட்சம் மக்களும் பொருளாதார சுதந்திரத்தையும் சமூக சுதந்திரத்தையும் இழந்துள்ளனர்.சேதன உர மோசடியால் விவசாயத்தில் ஈடுபடும் சுதந்திரமும் இழக்கப்பட்டுள்ளது.

மக்களுக்காக வீதியில் இறங்கி உரிமைகளை கோரி போராட்டம் நடத்தும் போது நீர்த் தாரை தாக்குதலுக்கும் கண்ணீர்ப் புகைத் தாக்குதலுக்கும் மக்கள் உள்ளாகும் போது நாட்டில் உண்மையான சுதந்திரம் உள்ளதா? என்பது கேள்விக்குறியே.

நுண் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் வர்த்தகங்களும் சொத்துக்களும் பரேட் சட்டத்தின் மூலம் ஏலம் விடப்படும் நாட்டில், கல்வியில் சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திரத்தை உண்மையாக கொண்டாட முடியுமா? என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும் என்றார். (ந-7)

## யாழ். இளைஞன் ஒருவர்

### ஐஸ் போதைப்பொருளுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்ற செயல்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர் கொழும்பில் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவரும், நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்ட நபருமாவார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரின் உடைமையில் இருந்து 1கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் வெளிநாடு ஒன்றுக்கு தப்பிச் செல்லும் நோக்குடன் கொழும்பு, கல்கிசை பகுதியில் உள்ள சொகுசு மாடி குடியிருப்பில் தங்கி இருந்த வேளையே பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் தற்போது கல்கிசை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## ஜனாதிபதி...

ஜனாதிபதியால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஜனாதிபதி விசேட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலை மாணவிகளால் தேசிய கீதம் ஜெயமங்கல கீதம் என்பன இசைக்கப்பட்டது.

அத்தோடு தாய்நாட்டின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்த அனைத்து இலங்கையர்களையும் நினைவுகூரும் வகையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் முகமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்த்து வைக்கப்பட்டதோடு இலங்கை இறையாண்மையுள்ள நாடு என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் 76 ஆவது சுதந்திர தினவிழா அணிவகுப்பு பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை மற்றும் தேசிய மாணவர் படையினால் முன்வைக்கப்பட்டது

இராணுவப்படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை மற்றும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த அதிகாரிகள் தேசியக் கொடிகளை ஏந்திய வாறு அணிவகுப்பில் பங்கேற்றனர்.

அணிவகுப்பு ஊர்வலம் நிறைவடையும் வரை விசேட பீடத்தில் நின்றிருந்த ஜனாதிபதி ரணில் அனைத்து படைவீரர்களுக்கும் மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

விழாவின் இறுதியாக தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுதந்திர தின விழாவில் இருந்து ஜனாதிபதி விடைபெறும் உத்தியோகபூர்வ நிகழ்வோடு சுதந்திரதின வைபவம் நிறைவுற்றது. (ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18890) 076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

A9 வீதி கைதடி சந்திக்கு அருகாமை

- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
- வட மாகாண சபை 300 மீற்றர்
- கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

தொடர்புகளுக்கு

071 173 3911

076 853 5022

(18892)

வாடகைக்குண்டு

யாழ். நகரில் புறஜெக்ரர்/ சவுண்ட்/ இருக்கை வசதிகளுடன் உள்ள திரை அரங்கு மற்றும் தங்குமிட அறைகள் நாள், மாத வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

077 651 0375

V2 VISA SERVICES

கனடா Visit Visas

077 77 20 322

077 77 19 322

Air Tickets

கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

தேவை

சட்டறிங் வேலைக்குரிய Shutter board பலகைகள் தீராந்திகள், தடிகள் உடன் தேவை.

075 164 0104

076 288 4366

(C-8282)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... 05.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org